Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை ரூபா 7.00

சன நூலகம்
யாழ்ப்பாணம்

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

MANOJ AIR TRAVELS
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்களுக்கும்
பார்சல் மற்றும் தபால் சேவைகளுக்கும்
இல. 13, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 3916, 0777 801038
(சி/2485)

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு : 2035 புரட்டாதி 30 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ரம்ழான் 01 [16.10.2004] சனிக்கிழமை இதழ்: 16

## ஏ–9 வீதி – கொக்காவில் பகுதியில் துயரம்

# யாழ்.வந்த ஹையேஸ் வானுடன் லொறி மோதியதில் இருவர் பலி!

## ஆறுபேர் படுகாயம் – பரந்தனிலும் ஒருவர் பலி

(கிளிநொச்சி)

**ஏ9 வீதியில் கொக்காவில் பகுதியிலும் பரந்தன் பூநகரி வீதியில் ஓவசியர் கடைச் சந்தியிலும் நேற்று இடம்பெற்ற இருவேறு விபத்துச் சம்பவங்களில் மூன்று பொதுமக்கள் உயிரிழந்த துடன் மேலும் ஆறுபேர் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.**

ஏ-9 வீதியில் கொக்காவில் பகுதியில் ஹையேஸ் வானும், லொறியும் நேரெதிரே மோதி விபத்துக்குள்ளானதில் சாரதி உட்பட இருவர் உயிரிழந்ததுடன் ஆறுபேர் படுகாயமடைந்தனர்.

நேற்றுப் பிற்பகல் 2 மணிக்கு இடம்பெற்ற இந்த விபத்தின்போது -

கல்வியங்காடு சீ.பி.எஸ்.வீதியைச் சேர்ந்த ஹையேஸ்வான் சாரதியான பொன்னுத்துரை சிவலிங்கம் (வயது55) என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். வானில் பயணம் செய்த யாழ்ப்பாணம் - கச்சேரியடியைச் சேர்ந்த நாகராசா சௌந்தரம் (வயது 68) என்ற பெண்மணி படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின் உயிரிழந்தார்.

கல்வியங்காடு பெரியமதவடியைச் சேர்ந்த சடாச்சரம் சந்திரன், யாழ்ப்பாணம் கசசேரியடியைச் சேர்ந்த செல்வராணி (வயது 35), கல்வியங்காட்டைச் சேர்ந்த குமாரசாமி தர்மலிங்கம் (வயது 68) ஆகியோர் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக நேற்று யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டனர்.

நுணாவில் மேற்கு சாவகச்சேரியைச் சேர்ந்த அருள்சோதி நித்தியா (வயது 20), யாழ்ப்பாணம் பெரிய மதவடியைச் சேர்ந்த பொன்னுத்துரை நந்தகோபால் (வயது 27) ஆகிய இருவருமே கிளிநொச்சி வைத்திய

(12 ஆம் பக்கம் பார்க்க)

## காலத்தை வென்றவன் நோர்வேயில் வெளியீடு!




(ஒஸ்லோ)

தமிழீழத் தேசியத் தலைவரின் பன்முக ஆற்றலையும் நுண்மதித் திறனையும் வெளிப்படுத்தும் - 'காலத்தை வென்றவன்' என்னும் நூல் வெளியீட்டு விழா நாளை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வந்தாறுமூலை விபத்தில் பெண் ஒருவர் உயிரிழப்பு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - வாழைச்சேனை வீதி வந்தாறுமூலையில் நேற்று நண்பகல் இடம்பெற்ற பஸ் விபத்தொன்றில் 50 வயதுடைய பெண்ணொருவர் பலியானார். இன்னொரு பெண் உட்பட 5 பேர் காயமடைந்தனர்.

வாழைச்சேனையிலிருந்து மட்டக்களப்பு நோக்கிச் சென்ற இ.போ.ச. பஸ் வண்டி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானப் பேச்சு மேசைக்குள் புலிகளை வைத்திருப்பதுதான் அரசுக்கு வெற்றியாகும்!

## அப்துல் கலாமின் உறவினர்கள் இலங்கையில் வாழ்கின்றனர்!

Noolaham Foundation.
g | aavanaham.org

மடைந்தனர்.

நேற்றுப் பிற்பகல் 2 மணிக்கு இடம்பெற்ற இந்த விபத்தின்போது -

கல்வியங்காடு சீ.பி.எஸ்.வீதியைச் சேர்ந்த ஹையேஸ்வான் சாரதியான பொன்னுத்துரை சிவலிங்கம் (வயது55) என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். வானில் பயணம் செய்த யாழ்ப்பாணம் - கச்சேரியடியைச் கல்வியங்காடு பெரியமதவடியைச் சேர்ந்த சடாச்சரம் சந்திரன், யாழ்ப்பாணம் கச்சேரியடியைச் சேர்ந்த செல்வராணி (வயது 35), கல்வியங்காட்டைச் சேர்ந்த குமாரசாமி தர்மலிங்கம் (வயது 68) ஆகியோர் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக நேற்று யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்து பொன்னுத்துரை நந்தகோபால் (வயது 27) ஆகிய இருவருமே கிளிநொச்சி வைத்திய

(12 ஆம் பக்கம் பார்க்க)

வாழைச்சேனையிலிருந்து மட்டக்களப்பு நோக்கிச் சென்ற இ.போ.ச. பஸ் வண்டி

(12 ஆம் பக்கம் பார்க்க)

# அப்துல் கலாமின் உறவினர்கள் இலங்கையில் வாழ்கின்றனர்!

## ரணிலுடனான சந்திப்பில் தெரிவிப்பு

(புதுடெல்கி)

தனது உறவினர்கள் இன்னமும் இலங்கையில் வாழ்ந்துவருவதாகவும், பல்வேறு காரணத்துக்காகவும் தாம் இலங்கையை என்றும் நேசிப்பதாகவும் இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம் தெரிவித்தார்.

இந்தியா சென்றிருந்த எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்திய ஜனாதிபதி அப்துல் கலாமைச் சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின்போது அவர் மேலும் கூறுகையில் -

இந்து சமுத்திரத்தின் முத்து என்று வர்ணிக்கப்படும் இலங்கையில் அந்நாட்டு மக்கள் நிரந்தர சமாதானத்துடன் சகல வளங்களையும் பெற்று வாழவேண்டும்.

இரு நாடுகளுக்குமிடையிலான புத்தமத உறவென்பது பண்டைய காலம்தொட்டே இருந்துவருகின்றது. புத்தர் உலகத்திற்கு பௌத்த மதத்தை வழங்கினார்.

இன்னும்கூட வடக்கு இந்தியாவில் வாழும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# சமாதானப் பேச்சு மேசைக்குள் புலிகளை வைத்திருப்பதுதான் அரசுக்கு வெற்றியாகும்!

## அரசாங்கத்துக்கு ரணில் விக்கிரமசிங்க பதில்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளை சமாதானப்பேச்சுவார்த்தை மேசைக்கு அப்பால் வைத்துக்கொண்டிருப்பது அரசாங்கத்துக்கு தோல்வியான தொருவிடயமேயாகும் என எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நான்கு நாட்கள் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து விட்டு நாடுதிரும்பிய போது கட்டுநாயக்க விமானநிலையத்தில் செய்தியாளர்கள் மத்தியில் பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் - (12 ஆம் பக்கம் பார்க்க)

# வீட்டிலிருந்த இளைஞரை இனந்தெரியாதோர் சுட்டனர்!

## வாழைச்சேனையில் சம்பவம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வாழைச்சேனை - விநாயகபுரத்தில் இனந்தெரியாத நபர்களின் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கான இளம் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

நெஞ்சில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களு

(12 ஆம் பக்கம் பார்க்க)

# சைக்கிளில் சென்றவர் துப்பாக்கிச் சூட்டில் காயம்!

(மட்டக்களப்பு)

சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இளைஞர் ஒருவர் மட்டக்களப்பு - கறுவாக்கேணியில் மர்ம மனிதர் ஒருவரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்தார்.

மட்டக்களப்பு - வாழைச்சேனை கறுவாக்கேணியில் நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் -

(12 ஆம் பக்கம் பார்க்க)

# கண்காணிப்புக் குழுவின் பணிகளுக்காக பின்லாந்துக்கு தமிழ்ச்செல்வன் புகழாரம்!





இலங்கையில் மிகவும் சிறப்பான பணியை முன்னெடுத்துவரும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவில் பின்லாந்து உறுப்பினர்களின் அற்புதமான பணிக்காக ஈழத் தமிழ் மக்கள் பின்லாந்து அரசுக்கு மிகவும் நன்றியுள்ளவர்களாக இருப்பதாக பின்லாந்து அரசியல் விவகாரங்களுக்குப் பொறுப்பான இராஜாங்கச் செயலாளரிடம் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் பின்லாந்து வெளிநாட்டு அமைச்சு வளாகத்தில் நடைபெற்ற சந்திப்பில் பின்லாந்து அரசியல் வெளிவிவகார இராஜாங்கச் செயலாளர் ஜாக்கோ லஜாவா தலைமையிலான குழுவினரைச் சந்தித்த விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள், தற்போதைய அரசியல் நிலைப்பாடுகள் குறித்து விரிவாக விளக்கினர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)


இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com
எக்ஸ்போ எயார் வான்வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
Your friend in the skies...


Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மகாபொல கொடுப்பனவை பெறுவதற்கு உடன் விண்ணப்பிக்க கோரிக்கை

யாழ்.பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் சில பல்கலைக்கழக மாணவர்கள் தமது மகாபொல புலமைப் பரிசில் ஏற்றுக்கொள்ளற் படிவங்களை மகாபொல நம்பிக்கை நிதியத்துக்கு அனுப்பிவைக்கவில்லை என மகாபொல நம்பிக்கை நிதியத்தின் செயலாளர் அறிவித்துள்ளார்.

இவ்வாறு ஏற்றுக்கொள்ளற் படிவம் அனுப்பி வைக்காதவர்களின் பெயர்ப்பட்டியல் மகாபொல நம்பிக்கை நிதியத்தால் யாழ்.பல்கலைக்கழக நலச்சேவைக் கிளைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இதுவரை விண்ணப்பிக்காத மாணவர்கள் உடன் வர்த்தக வாணிப நுகர்வோர் விவகார அமைச்சு அலுவலகத்தில் உரிய படிவங்களைப் பெற்றுப் பூர்த்திசெய்து விண்ணப்பங்களைக் கையளிக்குமாறு மாணவர்களைக் கோரியுள்ளது.

அவ்வாறு செய்யத்தவறும் மாணவர்களுக்கு மகாபொல புலமைப் பரிசில் தேவையற்றது எனக் கருதி நிராகரிக்கப்படும் என யாழ்.பல்கலைக்கழக நலச்சேவைக் கிளையின் உதவிப் பதிவாளர் தெரிவித்தார்.

## ஆடியபாதம் வீதியிலுள்ள
# மதுபான நிலையத்தை அகற்ற கோருகின்றனர் பொதுமக்கள்!

(யாழ்ப்பாணம்)

ஆடியபாதம் வீதியில் உள்ள மதுபான நிலையத்தினால் தமக்கு பலத்த இடையூறுகள் ஏற்படுவதாக அந்தப்பகுதியில் வசிக்கும் மக்கள் கிராமசேவையாளர்களிடம் முறையிட்டுள்ளனர்.

ஆடியபாதம் வீதியில் - கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும், திருநெல்வேலிச் சந்திக்கும் இடையில் உள்ள அம்மன் வீதிக்கு முன்பாகவுள்ள மாடிக்கட்டடத்திலேயே இந்த மதுபான நிலையம் சட்டவிரோதமான முறையில் இயங்கிவருகின்றது. இங்கு வரும் வாடிக்கையாளர்களால அந்தப்பகுதி மக்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவிடயமாக கிராமசேவையாளர்கள் நல்லூர் பிரதேச செயலரிடம் முறைப்பாடு செய்துள்ளனர். இது தொடர்பாக நல்லூர்ப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் பிரதேச செயலரினால் உறுதியான முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வெகுவிரைவில் இந்த மதுபான நிலையத்தினை இயங்காமல் இருக்க தாங்கள் முயற்சி எடுப்பதாக யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தினர் நல்லூர் பிரதேச செயலரிடம் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான சட்டவிரோதமான முறையில் இயங்கும் மதுபான நிலையங்களை பூரணமாக தடுக்கும் அதிகாரமுள்ள மதுவரித் திணைக்களத்தினரிடம் பேசி இவ்வாறான சட்டவிரோத மதுபான நிலையங்களுக்கெதிரான கடுமையான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

# யாழ்.நகர ஆலயங்கள் வீடுகளில் நள்ளிரவில் திருடர்கள் கைவரிசை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப் பகுதிகளான ஈச்சமோட்டை, பாண்டியன்தாழ்வு, கொழும்புத்துறை பகுதி ஆலயங்களிலும் மற்றும் சில வீடுகளிலும் செவ்வாய்க்கிழமை இரவு திருடர்கள் தமது கைவரிசையினை காட்டியுள்ளனர்.

இந்தச்சம்பவங்கள் பற்றி தெரியவருவதாவது - ஈச்சமோட்டை ஞான வைரவர் ஆலயத்தினுள் புகுந்த திருடர்கள் அந்தஆலயத்தின் மூலஸ்தான மூர்த்தியினையும், சாமுண்டீஸ்வரி மூர்த்தியினையும் பெயர்த்து மூர்த்திகளுக்குக் கீழ் இருந்த பவுண் மற்றும் பொருட்களையும் திருடியுள்ளதுடன், ஆலய விக்கிரத்திற்கு போடப்பட்டிருந்த தாலிக்கொடி மற்றும் பவுண் பொட்டுக்களை திருடியுள்ளனர். அத்துடன் ஆலய உண்டியல்களை உடைத்து திருடியுள்ளனர்.

மேலும் பாண்டியன்தாழ்வில் அமைந்துள்ள சந்தன மாதா கோயிலுக்கு சென்று அவ் ஆலயத்தில் இருந்த ஒலிபெருக்கி சாதனங்களையும் திருடிச் சென்றுள்ளனர்.

மேலும் இந்தவீதியில் அமைந்துள்ள நரசிம்ம வைரவர் ஆலயத்தின் கதவுகளை உடைத்து சல்லடை போட்ட திருடர்கள் அவ் ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு திருத்த வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தமையால் அங்கிருந்து எவ்வித பொருட்களினையும் எடுத்துச் செல்லவில்லை. இத்துடன் அந்த வீதியில் திருடர்கள் கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தினுள் சென்று அங்கிருந்து மதுபானத்தினைக் குடித்துவிட்டு சாப்பாடு அருந்தியபின்னர் , சென்றுள்ளமைக்கான தடயங்கள் காணப்படுகின்றன.

மேலும் இப்பகுதியில் ஒரு கடையிலும், மேலும் பல வீடுகளிலும் திருடர்கள் தமது கைவரிசையினை காட்டியுள்ளதாக அறியவருகின்றது. வீடுகளில் கோழிகள் மற்றும் விலையுயர்ந்த மின்சாதன பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

இவ்வாறு ஒரே இரவில் திட்டமிடப்பட்டு 11 இடங்களில் தொடர் திருட்டு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளமையானது சுண்டிக்குழி, ஈச்சமோட்டை, பாண்டியன்தாழ்வு, கொழும்புத்துறை பகுதி மக்களிடையே அச்சதையும், பீதியையும் ஏற்படுத்தியுள்ளது. (58)

## நவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி மட்டுவில் வடக்கு சந்திரபுரம் அருள்மிகு ஸ்ரீமகாமுத்துமாரியம்பாள் ஆலய நவராத்திரி விழா நேற்றுமுன்தினம் ஆரம்பமாகி 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நிறைவுபெறும். இந்தநாட்களில் தினமும் காலை 10.00 மணிக்கு அபிஷேகத்துடன் விஷேட பூசையும் மாலை 5.00 மணிக்கு விசேடபூசையும் இடம்பெறும்.

- - - - - - - - - - - - - - - -

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகம் நடத்தும் நவராத்திரி விழா இன்று மாலை 5 மணிக்கு மதுரகவி எம்.பி.அருளானந்தம் தலைமையில் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில், பூசை வழிபாடு, சரஸ்வதி தோத்திரம் என்பவற்றுடன் கலாபூஷணம் எஸ். பொன்னுத்துரையின் மாணவர்களான எஸ்.வசந்தஸ்கந்தா, எல்.கௌசல்யன், எஸ்.ரகுராம் ஆகியோரின் இசை நிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளது.

## தென்மராட்சி பிரதேசத்தில் காணாமற்போன மூவரின் ஆட்கொணர்வு மனு ஒத்திவைப்பு

தென்மராட்சிப் பகுதியில் காணாமற்போன மூன்றுபேரின் ஆட்கொணர்வுமனு கடந்த புதன் அன்று சாவகச்சேரி நீதிமன்றிற்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதில் மனுதாரர் சார்பில் சட்டத்தரணிகளான றெமிடியஸ் மற்றும் அ.விநாயகமூர்த்தி ஆகியோர் ஆஜராகி இருந்தனர். எதிர் மனுதாரர் சார்பில் சட்டத்தரணி அமுது விக்கிரம ஆராச்சியும் ஆஜராகியிருந்தனர்.

எதிரிகள் இல்லாது வழக்கு விசாரணைகள் எடுத்துக்கொள்ளப்பட்ட போது காணாமற்போன இருவரின் பெற்றோரும் ஒருவரின் மனைவியும் சாட்சியமளித்தனர்.

இதன்பின்னர் - வழக்கு விசாரனைகள் எதிர்வரும் மார்கழி மாதம் 8ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (29)

## முகாமைத்துவ கட்டடத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டது!

யாழ்ப்பாணம் சுப்பிரமணியம் பூங்காவின் முன்பாக அமைந்துள்ள பழைய நகரசபை மண்டபக் காணிக்குள் யாழ்.மாநகரசபையின் சூழல் திட்டமிடல் முகமைத்துவப் பிரிவின் கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டுவிழா நேற்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்றது.

இந்தநிகழ்வில் யாழ்.அரச அதிபர் எஸ்.பத்மநாதன் கலந்துகொண்டு அடிக்கல்லை நாட்டி வைத்தார். இதில் யாழ்.மாநகர ஆணையாளர் கலாநிதி க.குணராஜா யாழ்.மாவட்ட அரசியற்துறை பிரமுகர்கள் பலர் கலந்துகொண்டனர்.

இந்தக்கட்டடப் பணிகள் யாவும் அரச சார்பற்ற நிறுவனமான 'நோராட்' அமைப்பின் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட இருக்கின்றது.

இந்தக்கட்டடத்துக்கான அமைப்பை திருகோணமலையில் உள்ள கட்டடக் கலைஞர்கள் பொறுப்பேற்றிருக்கின்றனர்.

இந்தப் புதிய கட்டடத்தில் உரத் தொழிற்சாலையின் நிர்வாகப் பிரிவே முதலில் இயங்க வைக்கப்பட இருப்பதாக மாநகர ஆணையாளர் கலாநிதி க.குணராசா தெரிவித்தார்.

## நோய்த்தடுப்புக் குறித்து பல்கலை மாணவர் ஆராய்ச்சி

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட நான்காம் வருட மாணவர்களின் ஏற்பாட்டில் எழுவைதீவு மக்கள் மத்தியில் ஏற்படும் நோய்கள் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பான ஆய்வொன்று நாளை நடத்தப்படவுள்ளது. இந்தநிகழ்வில் அனைத்து எழு வைதீவு மக்களையும் கலந்துகொண்டு தமது நோய் மற்றும் பாதிப்புக்கள் குறித்து தெரிவிக்கமுடியும் எனவும் மாணவரின் ஆய்வுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (4)

## துரையப்பா விளையாட்டரங்கில்
# பார்வையாளர் மண்டபம் அமைக்க 67 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் முற்றவெளியில் அமைந்துள்ள பொது விளையாட்டரங்கில் பார்வையாளர் மண்டபம் அமைக்கப்படவுள்ளது.

மாநகரசபையின் ஏற்பாட்டில் அரச அதிபர் நிதியில் இருந்து 67 இலட்சம் ரூபா செலவில் நூற்றுக் கணக்கான இருக்கைகளைக் கொண்டதாக இந்தமண்டபம் அமைக்கப்படவுள்ளது.

ஏற்கனவே கடந்த காலத்தில் இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களினால் இந்த விளையாட்டரங்கு கடும் சேதத்துக்குள்ளாகி இருந்த நிலையில் அண்மையில் தான் மாநகர சபையினால் பல லட்சம் ரூபா செலவில் திருத்தியமைக்கப்பட்டிருந்தது.

இந்தவிளையாட்டரங்கை மாற்றி அமைப்பதற்கு இங்கு பார்வையாளர் மண்டபம் இல்லாது இருந்தமை பலராலும் சுட்டிக்காட்டப்பட்டு வந்தது.

இதனை அடுத்தே மாநகரசபையினர் விரைவில் இங்கு ஒரு பார்வையாளர் மண்டபத்தை அமைக்க தீர்மானித்துள்ளதாக மாநகர ஆணையாளர் கலாநிதி க.குணராசா தெரிவித்தார்.

## மறைக்கல்வி தேர்வு இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.மறைக்கல்வி நடுநிலையத்தால் ஏற்பாடு செய்துள்ள மறைக்கல்வி தேர்வுகள் இன்று சனி காலை 9.00 மணிமுதல் சம்பந்தப்பட்ட பாடசாலைகளில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தப்பரீட்சை எதிர்வரும் 23ம் திகதி நடத்துவதற்கு திட்டமிடப்பட்டு, அன்று விஜயதசமி தினமாக இருப்பதனால் இன்று நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. (58)

## சாவகச்சேரி வித்தகத்தில் மாநாடு

(யாழ்ப்பாணம்)

சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஆரண மாநாடு நாளை காலை 7.00 மணிக்கு சாவகச்சேரி பெரியமாவடியில் அமைந்துள்ள வித்தகத்தில் இடம்பெறவுள்ளது.

ஆசிரியர் சடா.மார்க்கண்டு தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் முன்னாள் கடலூர் மாவட்ட துணை ஆட்சியாளர் ஜோதிமுருகன், வள்ளலார் அறப்பணித் தலைவர் சிவகுமார் ஆகியோர் சிறப்புரை ஆற்றவுள்ளனர்.

வித்தகம் குருமணி கா.பரமசாமி அருளுரை வழங்குவார். (121)

## சான்றிதழ் வழங்கலும் சின்னஞ் சூட்டுதலும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சங்கம் நடத்தும் கரப்பந்து மத்தியஸ்தர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவமும், சின்னம் சூட்டும் நிகழ்வும் நாளை மாலை 4.00 மணிக்கு யாழ்.பலநோக்கு கூட்டுற[illegible] சங்க கேட்போர் கூடத்தில் ந[illegible] பெறவுள்ளது.

கப்டன்.ஏ.எம் குணசிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் அரச அதிபர் செ.பத்தநாதன் பிரதம விருந்தினராகவும், வடகிழக்கு மாகாண உடற்கல்வி உதவிப் பணிப்பாளர் த.அருணகிரிராஜா, தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா, யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் வி.மாதுளன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## வழங்கப்பட்ட சட்டபூர்வ அதிகாரத்தை இரத்து செய்தல்

"சமனகை" பண்டத்தரிப்பு, எனும் முகவரியில் வசித்தவரும், தற்போது சுவிற்சர்லாந்தில், டெல்ஸ்பேர்க்ஸ்ராசா, DELSBERG STRS, 16 4203, GRELLINGEN SWITZERLAND, கிரெலிங்கென் எனும் முகவரியில் வசிப்பவருமாகிய மரியகொறற்ரி சிவசுந்தரலிங்கமாகிய நான்,

திருமதி சரஸ்வதி அந்தோனிப்பிள்ளை என்பவருக்கு 04, மார்கழி, 2002 இல் எனது ஆதனமாகிய -

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்றிக்ட், வலிகாமம் மேற்கு, பண்டத்தரிப்பு கோவிற்பற்று பண்டத்தரிப்பு இறை "சமனகை" நெற்பரப்பு இருபத்தி ரெண்டரை (221/2) இதில் தென்மேற்குப் புறமாக நெற்பரப்பு இலா, பன்னிரண்டு (12) ஆம் வீடும் கிணறும் மட்டும். இதற்கு எல்லை கிழக்கு செல்வநாயகம் பெண் றெஜீனாவின் ஆதனம் வடக்கு மிகுதியாதனம், மேற்கு ஏழுமுழ அகல ஒழுங்கை தெற்கு பத்திமாதா கோவில் வீதி இதனடாங்கலும்

இவற்றைப் பராமரிக்க வழங்கிய சட்டபூர்வமான அதிகாரத்தை இந்நாளிலிருந்து (16/10/04) இரத்துச் செய்கிறேன். இதனை இலங்கை சோசலிசக் குடியரசு மக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன்.

இந்தத் திகதியிலிருந்தோ இதன் பின்னரோ இவ்வாதனத்தில் திருமதி சரஸ்வதி அந்தோனிப்பிள்ளைக்கோ அவருடன் சம்பந்தப்பட்டவர்களுக்கோ உரிமையில்லை என்று சகலருக்கும் அறியத்தருகிறேன்.

(C/3263) மரியகொறற்ரி சிவசுந்தரலிங்கம்.


மலிவு மலிவு கொள்ளை மலிவு

வாடிக்கையாளரின் வேண்டுகோளுக்கிணங்க தீபாவளி பண்டிகையை முன்னிட்டு

மாபெரும் மலிவு விற்பனை

இன்று முதல் (16-10-04) தொடக்கம் 11-11-2004 வரை சகல விதமான உடுபுடவைகள் மற்றும் ரெடிமேட் உடுப்புக்களையும் பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்.

லைடன் புடவை நிலையம்
410, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
222-2381 (C/3264)



நாகம்ஸ் சுன்னாகம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடான



ஸ்ரீகாந்த், சினேகா, கபாலி மற்றும் நாகேஷ் நடித்த (ரீல்ஸ்)

காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00,10.00 (பு.நே)



நிரஞ்சனாஸ் சங்கானை

விஜய், சோனியா அகர்வால் நடித்த



(சி-2723)

தினசரி காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)



ராஜா யாழ்ப்பாணம்.

இப்பொழுது இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடான

ரவி கிருஷ்ணா, சோனியா அகர்வால் நடித்த

G/7 றெயின்போ காலனி

பு.நே 10.30, 2.30, 9.30 மட்டும்

ரிக்கற் முன்பதிவு செய்துகொள்ளலாம்



(சி-2725)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேட்பாளர் பட்டியல்களில் 1/3 இடம் பெண்களுக்கு!

## அமைச்சரவை தீர்மானம்



தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் பட்டியலைத் தயாரிக்கும்போது, குறைந்தபட்சம் மூன்றிலொரு பங்கு பெண்களின் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டுமென நாடாளுமன்றத்தில் சட்டமூலம் கொண்டுவர அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் பேசிய அமைச்சரவைப் பேச்சாளர் - அமைச்சர் மங்கள சமரவீர இந்தத் தகவலை வெளியிட்டார்.

இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை பெண்கள் விவகார மற்றும் சமூகநலன்புரி அமைச்சர் சுமேதா ஜி.ஜெயசேன அமைச்சரவைக்குச் சமர்ப்பித்திருந்தார்.

இந்த யோசனையை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான அரசியல் அமைப்புத் திருத்தத்தை மேற்கொள்ள அமைச்சரவை உபகுழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு குறிப்பிட்ட விடயம் குறித்து ஆராய்ந்து பார்த்து, இரண்டு மாதத்துக்குள் அமைச்சரவைக்கு அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளதாகவும் மங்கள சமரவீர மேலும் தெரிவித்தார்.

# வடக்கு - கிழக்கு விகாரைகளை இந்தியா புனரமைக்கவேண்டும்!

## மல்வத்த பீடாதிபதி கோரிக்கை

மல்வத்தை பீடாதிபதி அதி வண.திப்பொட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரரை இந்தியத் தூதுவர் நிருபமா ராவ் கண்டி மகாவிகாரையில் சந்தித்து, அரசியற் சூழ்நிலை குறித்து விரிவாக உரையாடியதாகத் தெரியவருகிறது.

வடக்கு - கிழக்கில் அமைந்திருந்த பௌத்த விகாரைகள் அனைத்தையும், அதே இடங்களில் மீண்டும் கட்டியெழுப்பவும், பௌத்த விகாரைகள் புதிதாகத் தேவை என்று கோரப்படும் பகுதிகளில் புதிய விகாரைகளைக் கட்டியெழுப்பவும், இந்திய அரசு தனது உதவிகளையும், அழுத்தங்களையும் வழங்க முன்வரவேண்டும் என்று இந்தச சந்திப்பில் பீடாதிபதி உயர்ஸ்தானிகரைக் கேட்டுக்கொண்டார்.

இலங்கையில் ஆட்சியிலிருந்த எந்தவொரு அரசு அல்லது கட்சியும் சிறுபான்மையினத்துக்கு எந்தவித தீங்கும் நினைக்கவுமில்லை, இழைக்கவுமில்லை என்று தெரிவித்த மல்வத்தை பீடாதிபதி - புத்த தர்மத்தின்படி, சமாதானத்தை விரும்பும் மக்களாகவே பௌத்தர்கள் வாழ்ந்து வந்துள்ளதாகவும், தொடர்ந்தும் அனைத்து மக்களுடனும் சமாதானமாக வாழவே தாம் விரும்புவதாகவும் தெரிவித்தார்.

நாட்டில் நிரந்தர சமாதானத்தைக் கொண்டுவர இந்திய அரசு தனது பங்களிப்பை வழங்க முன்வரவேண்டும் என்றும், பீடாதிபதி இந்தச் சந்திப்பில் இந்திய உயர்ஸ்தானிகரிடம் கேட்டுக்கொண்டார்.

21 வருடங்களுக்கு முன்னர் இலங்கைக்கு தான் வந்தபோது, நாடு எவ்வளவு அமைதியாக இருந்தது என்பதை நினைவுகூர்ந்த இந்தியத் தூதுவர், அன்று தான் அவதானித்தது போன்றே இந்த நாட்டு மக்கள் புத்ததர்மத்தை மிகச் சீராகக் கடைப்பிடித்து சமாதானத்துடன் வாழவே மக்கள் விரும்புவதைத் தான் அவதானித்ததாகவும், தற்போது இனப்பிரச்சினையால் பாதிப்படைந்துள்ள நாட்டை மீண்டும் சீரமைக்க இந்தியா தன்னாலான பங்களிப்பை வழங்கும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

# ஒருமாதத்துக்குள் கல்வி அமைச்சில் தனியான தமிழ் மொழிப் பிரிவு

## தமிழர் ஆசிரியர் சங்கத்திடம் தாராழமெல் உறுதியளிப்பு



(திருகோணமலை)

தமிழ்மொழிமூல மாணவர்கள், தமிழ் ஆசிரியர்கள், தமிழ்ப் பாடசாலைகள் என்பவற்றின் பிரச்சினைகளை கையாள்வதற்கென தனியான "தமிழ் மொழிப் பிரிவு" இன்னும் ஒரு மாத்துக்குள் உருவாக்கப்படும் என்று இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத் தூதுக் குழுவிடம் கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி தாராடிமெல் உறுதி அளித்துள்ளார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தால், முன்னர் பல தடைவை முன்வைக்கப்பட்ட 15 அம்சக் கோரிக்கைகள் தொடர்பாக நேரடிப் பேச்சுவார்த்தைக்கு வருமாறு கல்வி அமைச்சின் செயலாளர் விடுத்த அழைப்புக்கு இணங்க, கல்வி அமைச்சில் இந்த பேச்சுவார்த்தை நேற்று முன்தினம் காலை 10 மணிமுதல் தொடர்ச்சியாக இரண்டரை மணிநேரம் நடைபெற்றது.

அதில் தமிழ் மொழிப்பிரிவின் ஆலோசனைப்படி எதிர்காலத்தில் தமிழ் மொழிப்பாடசாலைகள், மாணவர்கள், ஆசிரியர்கள் தொடர்பான அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண்பதென முடிவு செய்யப்பட்.டது

எதிர்வரும் ஒரு மாதத்துக்கு முன்பாகத் தற்போது தீர்க்கப்பட வேண்டி முன்னுரிமை விடயங்களை கையாள்வதற்கென இப்போது முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பிரதிக்கல்விப் பணப்பாளர் நாயகம் ஸ்ரீவர்த்தன தலைமையில் விசேட துரித செயலணிக்குழு ஒன்று அமைக்கப்பட்டு, இன்றைய இந்தக் குழுவின் ஏனைய உறுப்பினர்களாக கல்வி அமைச்சின் முகாமையாளர் விக்கிரமரத்ன, கல்விப்பணிப்பாளர்களான குணவர்த்தன மற்றும் ஜனாய் கச்சு முகம்மது ஆகியோர் செயற்படுவர்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நியமிக்கப்படுவதற்கென போட்டிப்பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளில் இருந்து, அவர்களின் பெறுபேறுகளின் அடிப்படையில் நேர்முகப் பரீட்சையை நடாததி நியமனம் வழங்கல்.

வடக்கு - கிழக்கு பகுதியில் தொண்டர் அடிப்படையில் சேவையாற்றி வழங்கப்பட்ட நிரந்திர நியமனப் பட்டியலில் இருந்து, விடுபட்ட 143 பேரினது விபரங்களை உடனடியாக வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சில் இருந்து பெற்று, அவற்றை பொது சேவை ஆணைக்குழுவுக்கு வழங்கி அவர்களுக்கு நிரந்திர நியமனம் வழங்கல்.

பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களை நிரந்தர சேவையில் இணைத்துக்கொள்வதற்காக இந்த விடயத்தை அமைச்சரவைக்கு சமர்ப்பித்து, அங்கீகாரம் பெறுவது ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் சம்பள நிலுவைகளை வழங்குவதற்குத் தேவையான 325 மில்லியன் ரூபா மற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் 10 மாத ஒரு வருடக் கடன்களை வழங்குவதற்கென 400 மில்லியன் ரூபா நிதியை வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சுக்கு விடுவிக்குமாறு மத்திய நிதி ஆணைக் குழுவுக்கு சிபாரிசு செய்தல்.

தமிழ்மொழிப் பாடசாலைகளில் ஆசிரியர் ஆளணி மற்றும் பௌதீக வளத் தேவைகள் குறித்து, மிகக் கூடிய விரைவில் நடவடிக்கை எடுத்தல் போன்ற முக்கிய விடயங்களை விரைவில் நடைமுறைப் படுத்துவதென இணங்கிக்கொள்ளப் பட்டது. (10)

# ஜே.வி.பி திருமலை எம்.பியை உண்ணாவிரதிகள் திருப்பி அனுப்பினர்

விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள இரண்டு ஊர் காவற்படையினரையும், விடுதலை செய்யுமாறு கோரி வட - கிழக்கு சிங்கள அமைப்பினர் மேற்கொண்டுவரும் உண்ணாவிரதப் போராட்டத்தைப் பார்வையிட நேற்றுமுன்தினம் ஜே.வி.பியின் திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த விஜயசேகர சென்றவேளை, அவருக்கு உண்ணாவிரதிகள் எதிர்ப்புத் தெரிவித்து திருப்பி அனுப்பினர்.

எமது இந்தப் போராட்டத்துககு அரசியல்வாதிகள் வருவதை அனுமதிக்க மாட்டோம். எமது போராட்டம் அரசுக்கெதிரானது. எமது போராட்டத்தில் அரசியல்வாதிகள் வந்து கலந்து விட்டு அரசியல் இலாபங்களைத் தேடிக்கொள்ள முனைகின்றனர். இதை நாம் ஏற்க மாட்டோம். இவ்வளவு நாட்களாக உண்ணாவிரதமிருக்கும் எம்மைப் பார்வையிடவராதவர்கள், தற்போது வருவதன் நோக்கம் என்ன எனக் கூறியே அவரைத் திருப்பி அனுப்பினர்.

இதனையடுத்து அவரும் அவரது ஆதரவாளர்களும் உண்ணாவிரதம் இருக்கும் இடத்திலிருந்து நூறுமீற்றர் தொலைவில் இருந்து கொண்டு விடுதலைப்புலிகள் இரண்டு ஊர்காவற்படையினரையும் விடுவிக்க வேண்டுமெனக் கோஷம் எழுப்பிவிட்டு கலைந்து சென்றனர். (04)

# ஐ.தே.கட்சியின் பொன்விழா நிகழ்வில் ஜனாதிபதி வேட்பாளர் அறிவிப்பு!

டிசம்பர் மாதம் 5 ஆம் திகதி, நடைபெறவுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் 50 ஆவது வருடாந்த மாநாட்டின்போது, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் அபேட்சகராக ரணில் விக்கிரமசிங்கவின் பெயரை முன்மொழிவதற்குத் தீர்மானிக்கப் பட்டுள்ளதாக அந்தக் கட்சியின் உள்ளகத் தகவல்கள் தெரிவித்தன.

ரணில் விக்கிரமசிங்கவை ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக அந்தக் கட்சியின் 50 ஆவது மாநாட்டில் முன்மொழிவதற்காக, மாநாடு நடைபெறுவதற்கு முன்னர், நடைபெறவுள்ள செயற்பாட்டுச் சபையின் கூட்டத்தின்போது, தீர்மானிக்கப்படுமென, கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார். (தே)

# சந்திரிகா ஈரானுக்கு செல்லவுள்ளார்

(கொழும்பு)

ஈரான் அரசின் அழைப்பின் பேரில் - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எதிர்வரும் 22 ஆம் திகதியன்று ஈரானுக்குச் செல்லவுள்ளார்.

இந்தப் பயணத்தின்போது, இரு நாடுகளுக்கும் இடையிலான ஒப்பந்தங்கள் சிலவற்றையும் ஏற்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (தே)

# பிரதேச செயலர்கள் 155 பேர் அடுத்த ஆண்டில் இடமாற்றம்

(கொழும்பு)

நாடு முழுவதிலுமுள்ள பிரதேச செயலகங்களில் பணியாற்றும் 308 பிரதேச செயலர்களில், 155 பேரை அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் இடமாற்றம் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஒரே தடவையில் அதிகளவானோர் இடமாற்றம் செய்யப்படுவது இதுவே முதற் தடவையாகும்.

இந்த இடமாற்றங்கள் குறித்து, அனைத்துப் பிரதேச செயலர்களின் சங்கம் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அரச பொதுநிர்வாக உள் நாட்டலுவல்கள் அமைச்சு அதிகாரி ஒருவர் அரச சேவை ஆணைக் குழுவின் பரிந்துரைகளின் அடிப் படையிலேயே இந்த இடமாற்றங்கள் நிகழவுள்ளதாகத் தெரிவித்தார்.

5 வருடங்களுக்கும் மேலாக ஒரே இடத்தில் பணியாற்றும் அரச ஊழியர்களின் இடமாற்ற அடிப்படையின் கீழேயே இந்த இடமாற்றங்களும் செயற்படுத்தப்படவுள்ளன. (தே)

# வாகனங்களின் விலைகள் உயர்வு

(கொழும்பு)

வாகனங்களுக்கான சுங்கத் தீர்வைகள் அதிகரிக்கப்பட்டுள்ளமையை அடுத்து, வாகனங்களின் விலைகளில் உயர்வுகள் ஏற்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் இந்தச் சுங்கத் தீர்வில் அதிகரிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பெற்றோலில் இயங்கும் சிறிய வாகனங்கள் மற்றும் [illegible] ஆகியவற்றின் மீதான [illegible] தீர்வைகளே இவ்வாறு அதிகரிக்கப் பட்டுள்ளன. (01)

## பொருளாதார வீழ்ச்சிக்கு

# உலக சந்தையின் விலை அதிகரிப்பை அரசாங்கம் காரணம் கூறுவது தவறு!

## ஐ.தே.கட்சி கண்டனம்

(கொழும்பு)

அரசாங்கம் மசகு எண்ணெய் பெரல் ஒன்றை கொள்வனவு செய்ய மேலதிகமாக 0.05 அமெரிக்க டொலர்களை மாத்திரமே செலவிடுவதாக ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

உலக சந்தையில் மசகு எண்ணெய் பெரல் ஒன்று 55 அமெரிக்க டொலர்களாக விற்பனை செய்யப்படுகிறது. எனினும், அரசாங்கம் ஒருபோதும் அந்த விலைக்கு மசகு எண்ணெய்யை, கொள்வனவு செய்யவில்லை. அது 42.5 அமெரிக்க டொலர்களுக்கே மசகு எண்ணெய்யைக் கொள்வனவு செய்துள்ளது.

இதேவேளை - ஐக்கிய தேசிய கட்சி ஆட்சியில் இருந்து அகற்றப்படும்போது, அது பெரல் ஒன்றின் மசகு எண்ணெய்யை 39.9 அமெரிக்க டொலர்களாகக் கொள்வனவு செய்தது. அதன் அடிப்படையில் தற்போதைய அரசாங்கம் மேலதிகமாக 158.9 [illegible] களையே அதிகமாகச் செலவிட்டுள்ளது.

இந்த நிலையில் உலக சந்தையின் எரிபொருள் விலையை காரணம்கூறி, அரசாங்கம் தமது பொருளாதார வீழ்ச்சிக்கொள்கையை வெளிப்படுத்துவது ஏற்றுக்கொள்ளக்கூடிய தொன்றல்ல எனத் தெரிவித்தார்.

இதேவேளை, எரிபொருள்களின் விலை மேலும் அதிகரிக்கப்படும் என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்துள்ளன.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் பேசிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க -

உலக சந்தையில் எரிபொருட்களின் விலை உயர்வதற்கு முன்னால், இலங்கைபோன்ற நாடுகள் பாரிய பிரச்சினைகளுக்குள்ளாகியுள்ளன.

எரிபொருள் விலையுயர்வால் வள மக்களைப் பாதிக்கப்படாத வகையில் மாற்றுத்திட்டங்கள் வகுக்கப்படவேண்டும் என்று தெரிவித்தார். (01)

# அரச ஊழியர்களுக்கு 1500ரூபா சம்பள உயர்வு

(கொழும்பு)

அரசாங்கத்தால் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு - செலவுத் திட்டத்தில், அரச ஊழியர்களுக்கு 1500 ரூபா சம்பள உயர்வை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பள உயர்வின் மூலம் அரசாங்கம் 30 பில்லியன் ரூபா செலவைத் தாங்கிக்கொள்ளும் நிலையேற்பட்டுள்ளது. அத்துடன் தற்போது, இடைக்காலக் கொடுப்பனவாக வழங்கப்பட்டுவரும் 2200 ரூபாவை அடிப்படைச் சம்பளத்துடன் சேர்ப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இதற்கு மேலதிகமாக எரிபொருள் வழங்குவதற்குப் பங்கீட்டு அட்டை முறையை அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இது நிவாரணம் பெறுபவர்களுக்கே வழங்கப்படவுள்ளது.

சமுர்த்தி பயனாளிகளுக்கு இவை அறிமுகப்படுத்துவதன் மூலம், நிவாரணப் பொருட்களின் விலையிலேயே எரிபொருளையும் பெற்றுக் கொள்ளமுடியும். (தே)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஷேவாக்கின் அபார ஆட்டத்தால் இந்தியா 291 ஓட்டங்களைப்பெற்றது



அவுஸ்ரேலிய அணிக்கு எதிராக இரண்டாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாள் ஷேவாக்கின் அபாரமான ஆட்டத்தால் இந்திய அணி 6 விக்கெட் இழப்பிற்கு 291 ஓட்டங்களைப்பெற்றது.

முதலில் விளையாடிய அவுஸ்ரேலிய அணி, கும்ளேயின் அபாரமான பந்துவீச்சில் 235 ஓட்டங்களில் முதல் இனிங்ஸில் ஆட்டமிழந்தது. லாங்கர் அதிகபட்சமாக 71 ஓட்டங்கள் எடுத்தார். கும்ளே 7 விக்கெட் சாய்த்தார்.

பினனர் முதல் இனிங்சை விளையாடிய இந்தியா நேற்றுமுன்தினம் முதல்நாள் ஆட்டநேர முடிவில் ஒரு விக்கெட் இழப்புக்கு 28 ஓட்டங்கள் எடுத்திருந்தது. ஷேவாக் 20 ஓட்டத்துடனும், இர்பான் பதான் ஓட்டமெதுவும் எடுக்காமலும் இருந்தனர்.

நேற்று 2 ஆவது நாள் ஆட்டத்தில் ஷேவாக்கும், பதானும் தொடர்ந்து ஆடினார்கள். ஷேவாக்கின் ஆட்டத்தில் அனல் பறந்தது. அதே நேரத்தில் பதான் பொறுப்புடன் ஆடினார்.

மக்ரா வீசிய ஒரே ஓவரில் ஷேவாக் 2 பவுண்டரி அடித்தார். முதல் மற்றும் 4 ஆவது பந்தில் அவர் இதை



அடித்தார். இந்திய அணி 26.4 ஆவது ஓவரில் 50 ஓட்டங்களைத் தொட்டது.

வோன் வீசிய ஒரே ஓவரில் ஷேவாக் 2 பவுண்டரி அடித்து அரைசதத்தைத் தொட்டார். 91 பந்தில் 9 பவுண்டரியுடன் 50 ஓட்டங்கள் எடுத்தார்.

மிகவும் பொறுப்புடன் ஆடிக்கொண்டிருந்த இந்த ஜோடியை வோன் பிரித்தார். இர்பான் பதான் 14 ஓட்டங்களில் அவரது பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். இந்த விக்கெட்டை கைப்பற்றியதன் மூலம் அதிக விக்கெட்டைக் கைப்பற்றிய முரளிதரனின் சாதனையை முறியடித்து புதிய சாதனை படைத்தார். 2 ஆவது விக்கெட்டுக்கு ஷேவாக்குடன் டிராவிட் ஜோடி சேர்ந்தார்.

வோன் வீசிய ஓவரில் டிராவிட் 2 பவுண்டரி அடித்தார். இதன் மூலம் அணியின் ஓட்ட எண்ணிக்கை 100 ஐத் தொட்டது. மதிய உணவு இடைவேளையின்போது இந்தியா 2 விக்கெட் இழப்புக்கு 101 ஓட்டங்கள் எடுத்திருந்தது. ஷேவாக் 61 ஓட்டங்களுடனும், டிராவிட் 12 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

உணவு இடைவேளைக்குப் பிறகு ஷேவாக்கும் டிராவிட்டும் தொடர்ந்து ஆடினர். ஷேவாக் தொடர்ந்து அதிரடியாக ஆடி ஓட்டங்களை எடுத்து வந்தார். ஷேவாக் 92 ஓட்டத்தில் இருந்தபோது மக்ரா வீசிய பந்தைத் தூக்கி அடித்தார்.



அதைப் பிடிக்க கடிச் ஓடிவந்தார். ஆனால், அவரால் முடியவில்லை 95 ஓட்டங்களாக இருந்தபோது அவர் பவுண்டரி அடித்து 99 ஓட்டத்தைத் தொட்டார். கஸ்பரோவிச் பந்தை பவுண்டரிககு அடித்து அவர் சதத்தைக் கடநதார்.

114 பந்துகளில் 15 பவுண்டரிகளுடன் 103 ஓட்டங்களை ஷேவாக் எடுத்தார். அப்போது அணியின் ஓட்ட எண்ணிக்கை 160 ஆக இருந்தது. டிராவிட் 25 ஓட்டங்களை எடுத்தார்.

வேஷாக் 118 ஓட்டங்களை எடுத்திருந்தபோது லீமன் வீசிய பந்தை அடித்தார். பந்து கையுறையில்பட்டு பிடியாக மாறியது. ஆனால், நடுவர் ஷெப்பெர்ட் ஆட்டமிழப்புக் கொடுக்கவில்லை. தொலைக்காட்சியில் அது ஆட்டமிழப்பு என்பது தெளிவாகத் தெரிந்தது.

அணியின் ஓட்ட எண்ணிக்கை 178 ஆக இருந்தபோது, கஸ்பரோவிச் பநதுவீச்சில் போல்ட் முறையில் ராவிட் ஆட்டமிழந்தார். அவர் மூன்று பவுண்டரிகளுடன் 26 ஓட்டங்களை எடுத்தார். ஷேவாக், ராவிட் ஜோடி 26.4 ஓவரில் 95 ஓட்டங்கள் எடுத்தது.

அடுத்து நான்காவது விக்கெட்டுக்கு ஷேவாக்குடன் கப்டன் கங்கூலி ஜோடி சேர்ந்தார். கஸ்பரோவிச் வீசிய பந்தை கங்கூலி அடித்தபோது, அதை கடிச் பிடியெடுத்தார். ஆனால், நடுவர் அதை நோபோல் என்று அறி




வித்தார். அதனால், அவர் ஆட்டமிழப்பிலிருந்து தப்பித்தார்.

கங்கூலி 4 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது மீண்டும் கஸ்பரோவிச் வீசிய பந்தை அடிக்கும்போது அது கில்கிறிஸ்ட்டிடம் பிடியாக மாறியது. ஆனால், அவர் அதைப் பிடிக்கத் தவறினார்.

தேனீர் இடைவேளையின்போது இந்திய அணி 3 விக்கெட் இழப்புக்கு 197 ஓட்டங்கள் எடுத்திருந்தது. பின்னர் ஆடத்தொடங்கிய கங்கூலி 9 ஓட்டங்கள் எடுத்தநிலையில் ஜிலெஸ்பியின் பந்துவீச்சில் கில்கிறிஸ்டிடம் பிடிகொடுத்து ஆட்டமிழநதார். தொடர்ந்து களமிறங்கிய லக்ஸ்மன் 4 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஜிலெஸ்பியின் பந்து வீச்சில் போல்டாகிப் பவிலியன் திரும்பினார்.

நன்றாக ஆடிக்கொண்டிருந்த ஷேவாக் 155 ஓட்டங்கள் எடுத்த நிலையில் வோனின் பந்தை அடிக்க ஆசைப்பட்டு கிளார்க்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அவர் 221 பந்துகளில் 21 பவுண்டறிகளின் உதவியுடன் 155 ஓட்டங்களை எடுத்தார். கடைசியாக 2 ஆவது நாள் ஆட்டநேர முடிவில் இந்தியா 6 விக்



கெட் இழப்பிற்கு 291 ஓட்டங்களை எடுத்திருந்தது. கைவ் 34 ஓட்டங்களுடனும், பட்டேல் 27 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் ஆடிக்கொண்டிருந்தனர்.

# அஸ்ரா கிண்ண அரையிறுதி ஆட்டத்தில் மொனராகல வித்தியாலயம் வெற்றி!



(தனுஷன்)

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை பாடசாலை ரீதியில் 14 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையே நடைபெற்றுவரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் அரை இறுதியாட்டம் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தல் நேற்று நடைபெற்றது. இதில் மொனராகல நிசங்க மத்திய மகாவித்தியாலயம் 2 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

50 ஓவர்களைக்கொண்ட அரையிறுதியாட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணி, 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 189 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதில் யாழ்.மத்திய கல்லூரி அணித் தலைவர் மயூரன் 93 ஓட்டங்களையும், சிவகரன் 22 ஓட்டங்களையும், ரதீசன் 17 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

மொனராகல நிசங்க மத்திய மகா விதத்தியாலய அணியின் சார்பில், நந்தன 8 ஓவர்கள் பந்துவீசி 31 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும, தரங்க 7 ஓவர்கள் பந்துவீசி 33 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், திசநாயக்க 8 ஓவர்கள் பந்துவீசி 29 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மொனராகல நிசங்க மத்திய மகா விதத்தியாலயம் 49 ஓவர்களில் 8 விககெட்டுக்களை இழந்து 190 ஓட்டங்களைப்பெற்று 2 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இதில் நிசான் திலங்க 70 ஓட்டங்களையும், டி.எம்.விசுவகசாயன் நவரட்ண 46 ஓட்டங்களையும், டி.எம்.பிரசாத் மதுசங்க 19 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

யாழ்.மத்திய கல்லூரி அணியின் சார்பில் தனுஷன் 10 ஓவர்கள் பந்து வீசி 38 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும், மயூரன் 9 ஓவர்கள் பந்துவீசி 48 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், கோபிசன் 7 ஓவர்கள் பந்துவீசி 13 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும், ஜனோசன் 4



(மயூரன்)

ஓவர்கள் பநதுவீசி 13 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இப்போட்டியில் வெற்றிபெற்ற மொனராகல மத்திய மகா வித்தியாலயம் இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது. இந்தச் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி எதிர்வரும் 24 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தால் அஸ்ரா கிண்ணத்துக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தச் சுற்றுப்போட்டியின் நடுவராக பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் சார்பில் நிசாந்தகுமார கலந்து கொண்டார். (58)




## பாக்ரெல் - இறுதி லீக் ஆட்டம்

# 6 விக்கெட்டுக்களால் பாகிஸ்தான் இலங்கை அணியை வீழ்த்தியது!



பாக்ரெல் கிண்ணத்துக்கான முககோண ஒருநாள் போட்டித்தொடரின் இறுதிலீக் ஆட்டத்தில் இலங்கை அணியை ஆறு விக்கெட்டுக்களால் பாகிஸ்தான் தோற்கடித்தது.

நேறறுமுன்தினம் லாகூரில் நடந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி களதடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இலங்கை அணி துடுப்பெடுத்தாடிக்கொண்டிருந்தபோது பாகிஸ்தான் அணிப் பந்துவீச்சாளர் நவீட் உல் ஹசன் 26 ஓட்டங்களுக்குள் இரண்டு ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களையும் சாய்த்தார்.

ஜெயந்த - 9, ஜெயசூரிய - 10 ஓட்டஙகளுடன் ஆட்டமிழந்து சென்ற பின்னர், அத்தப்பத்து - சங்ககார ஜோடி இணைந்து நிலைத்துநின்று அபாரமாக ஆடியது.

இலங்கை அணி 172 ஓட்டங்களைப்பெறும்வரை இந்த ஜோடியைப் பாகிஸ்தான் பந்துவீச்சாளர்களால் [illegible] ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் அப்ரிடியின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

இதையடுத்து களமிறங்கிய ஜெயவர்த்தன 18 ஓட்டங்களுடன் சமியின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். அதேவேளை அணித்தலைவர் அத்தப்பத்து அபாரமாக ஆடி ஓட்டங்களைக குவித்துக்கொண்டிருந்தபோது - 111 ஓட்டங்களில் அவர் ஆட்டமிழந்தார். இவர் 114 பந்துகளில 8 பவுண்டரிகள், 2 சிக்ஸர்களுடன் இந்த ஓட்டத்தைப்பெற்றார்.

அதையடுத்து கண்டம்பி 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். 50 ஓவர்கள் நிறைவில் இலங்கை அணி 6 விக்கெட்டுகளை இழந்து 293 ஓட்டங்களைப்பெற்றது. டில்சான் 32, சநதன 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இதையடுத்து களமிறங்கிய பாகிஸ்தான் அணி நிலைத்துநின்று ஆடியது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களைப் பிரிக்க 99 ஓட்டங்கள்வரை இலங்கை அணி காத்திருக்க நேர்ந்தது. யாசிர் ஹமிட் 48 ஓட்டங்களில் சந்தனவின் பந்துவீச்சில் ஆட்டமிழந்து சென்றார். அடுத்து சொகைப் மலிக் களமிறங்கி நிலைத்துநின்று ஆடினார்.

அதேவேளை 57 ஓட்டங்கள் பெற்றிருந்த நிலையில் சல்மான் பட் சமிந்தவாஸின் பந்துவீச்சில் ஆட்டமிழந்து சென்றார். அதன்பின் இன்ஸமாம் களமிறங்கி இலங்கை அணியின் பந்துவீச்சை விளாசித் தள்ளினார். சொகைப் மலிக் 56 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் டில்கார பெர்னாண்டோவின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். இதையடுத்து யூசுப்



யுகானா களமிறங்கி 27 பந்துகளில் 30 ஓட்டங்களைப்பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். இவரது விக்கெட்டை சமிந்தவாஸ் கைப்பற்றினார்.

48.5 ஓவர்களில் பாகிஸ்தான் அணி 4 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 297 ஓட்டங்களைப்பெற்று வெற்றிபெற்றது.

இன்ஸமாம் 59 பந்துகளில் 8 பவுணடரிகள், 1 சிக்ஸருடன் 76 ஓடடங்களுடனும், அப்துல் ரசாக் 4 ஓடடங்களுடனும், ஆட்டமிழக்காமல் இருந்தனர். இந்தப் போட்டியில் பாகிஸ்தான் அணி 28 ஓட்டங்களையும், இலங்கை அணி 26 ஓட்டங்களையும் உதிரிகளாக விட்டுக்கொடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்விரு அணிகளுக்குமிடையிலான இறுதிப்போட்டி இன்று நடைபெறும்.

# இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இந்தியாவுக்கு வெற்றிவாய்ப்பு!

## கும்ளேயின் கணிப்பு இது




சென்னையில் நடைபெறும் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி வெற்றி பெறுவதற்குப் பிரகாசமான வாய்ப்புக்கள் இருக்கின்றன என்று இந்திய அணியின் சுழற்பந்துவீச்சாளர் அனில் கும்ளே தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் முதல்நாள் ஆட்டத்தில் அவுஸ்ரேலிய அணியை தனது அபாரமான பந்துவீச்சின் மூலம் திணறடித்த பின்னர் பேசிய அவர்-

ஆடுகளம் நன்றாக இருந்தது. பந்து அதிகமாக எகிறியது. நான் இப்படிச் சிறப்பாக பந்து வீசியதற்கு முக்கிய காரணமே ஹர்பஜன்சிங் தான். அவர்தான் தொடக்க ஜோடியைப் பிரித்து எனக்கு மிகவும் உதவியாக இருந்தார்.

2 ஆவது நாள் ஆட்டத்தில் இந்திய வீரர்கள் சிறப்பாக ஆடி மிகப் பெரிய ஸ்கோரை எடுப்பார்கள். இதனால் சென்னை டெஸ்டில் இந்தியாவுக்கு வெற்றிவாய்ப்பு ஏற்படும். எனது பந்துவீச்சு மிகவும் திருப்தி அளித்தது. அவுஸ்ரேலிய கப்டன் கில்கிறிஸ்ட், கஸ்பரோவிச் ஆகியோர் நடுவர் 'அவுட்' கொடுக்கும் முன்பே மைதானத்தைவிட்டு வெளியேறி விட்டனர். இது அவர்களது நேர்மையைக் காட்டுகிறது. இவ்வாறு கும்ளே கூறினார்.

கும்ளே நேற்றுமுன்தினம் 7 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியதன் மூலம் அதிக விக்கெட்டுக்கள் சாய்த்த வீரர்களின் பட்டியலில் 8 வது இடத்தைப் பிடித்தார். அம்புரோசை (மேற்கிந்தியத் தீவுகள் 405) அவர் பின்னுக்குத் தள்ளினார். கும்ளே 86 டெஸ்டில 409 விக்கெட்டுக்களை எடுத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிந்துகொள்ளுங்கள்

❖ சிறுவர்களின் பற்கள் சிறிதாக இருக்கும். அதற்குக் காரணம் - தாடை எலும்பு சிறிதாக இருப்பதேயாகும். சிறுவர்கள் வளர ஆரம்பிக்கும்பொழுது, தாடை எலும்புகளும் பெரிதாகும். இதற்குப் பொருத்தமான பெரிய பற்கள் தேவைப்படும். சிறிய பாற் பற்கள் அளவில்லாமல் போகும்.

இதனால் தாடை எலும்பு சிறிது சிறிதாகப் பெரிதாகும்போது, அதற்கு ஏற்ற அளவான நிரந்தரமான பற்கள் உள்ளே வளர ஆரம்பிக்கும். இவை வளர்ந்து வெளிப்புறமாக இருக்கும் சிறிய பாற்பற்களை விழப்பண்ணும். உங்களுடைய சிறிய பற்கள் விழுந்து, பெரிய பற்கள் முளைப்பதற்கான காரணத்தை இப்போது தெரிந்து கொண்டீர்களா?

**ஆந்தை**

வேட்டையாட ஆந்தை தன்னுடைய கேட்கும் சக்தியையே பயன்படுத்து கிறது. ஆனால் ஆந்தைக்கு மிகப்பெரிய கண்கள் இருக்கின்றன. அதன் தலையில் 1/3 பாகத்தில் கண்கள் அமைந்துள்ளன.

**தும்பி**

வினோதமான முறையில் 'தும்பி' தன்னுடைய இரையைப் பிடிக்கிறது. அதன் கால்களை கூடைபோல் வைத்துக் கொண்டு, இரை அதற்குள் விழு மாறு செய்து தனது இரையைப் பிடிக்கிறது.

# விடுகதைகளும் விடைகளும்

1. வெள்ளை மாளிகைக்கு வாசல் இல்லை. வழியும் இல்லை. அது என்ன?
2. மூன்று கொம்பு மாடு, ஒரு கொம்பால் முட்டுது. அது என்ன?
3. மரக்கிளையே தலையில் இருந்தாலும், மனம் கலங்கித் திரிவான் காட்டுக்குள் அவன் யார்?
4. நீல நிற மேடையிலே, கோடி மலர் பூத்திருக்கும். அது என்ன?
5. ஒரு மின்னல் வெளிச்சத்தில் பிடிபட்டான். அவன் யார்?
6. படுக்க முடியாத பஞ்சு மெத்தை. பசிக்கு உணவாகச் செய்த மெத்தை. அது என்ன?
7. ஒன்றுக்குப்பின் ஒன்றாய் வரும் மந்தை அல்ல. ஓயாத சத்தம் வரும் சந்தையும் அல்ல. அது என்ன?

1. கோழிமுட்டை
2. கெடிகார முள்
3. மான்
4. வானில் நட்சத்திரங்கள்
5. புகைப்படம்
6. பாண்
7. கடல்

# MY SELF

My name is Asha Visvalingam. I live at Karanavai. I am eleven years old. My father's name is Visvalingam. He is a carpenter. My mother's name is Ramany. She is a house wife. I study at J/ Nelliady Madya Maha Vidyalayam. I have a brother. My favourite subjects are English, Maths and Tamil. My favourite game is netball. My friends' names are Mirunalini, Vithiya, Shathana, Jamela, Thavaragini and Kirushaliny.

V.Asha, Grade 7

# தோடம்பழம்

தோடம்பழமாம் தோடம்பழம்
அம்மாவிற்கு இரண்டு
அப்பாவிற்கு இரண்டு
எனக்கு மட்டும் ஒன்று
எல்லாமாக ஐந்து.

யோ. கிருஷாளினி
தரம் 1
யா/சரஸ்வதி மகளிர் வித்தியாலயம்.

# சித்திரக்கதை

## தப்பிப் பிழைத்த பறவைக்குஞ்சு

(சென்றவாரத் தொடர்ச்சி...)



காம்பின் உதவியுடன் கூட்டைத் தூக்கிக்கொண்டு பறந்தார்கள்.

கூட்டை எப்படித் திறப்பது என்று யோசித்தார்கள்?

சுண்டெலியார் கூட்டைத் திறக்க உதவி புரிந்தார்.

பறவைக்குஞ்சு தனது அம்மா, அப்பா பறவைகளுடன் சந்தோஷமாகச் சென்றது.

(முற்றும்)

இங்கே மடிக்கவும்





**சிந்தனைக்கு**

பேராசையும், கோபமும் உள்ளவனுக்கு மன அமைதி கிடைப்பதில்லை.

# சிறுவர் அரங்கம்

# மாயக் குமிழ்

அழகான மாலை நேரம் - பொழுது போகாது தனது வீட்டிலே அமர்ந்திருந்த குட்டி யானையார் - அன்றைய பின்னேரப் பொழுதை இனிமையாகக் கழித்திடுவது எப்படி என்று ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தார்.

சிந்தனையோடு அமர்ந்திருந்த யானைக் குட்டியாருக்குத் திடீரென்று நல்லதொரு யோசனை தோன்றியது. சவர்க்காரக் குமிழ்களை ஊதி விளையாடினால் நல்லாயிருக்குமே என்று அவர் யோசித்தார்.



பாத்திரம் ஒன்றிலே தணணீரை நிரப்பி, அதிலே வாசச் சவர்க்காரக் கட்டியைப் போட்டு நுரை வருமாறு நன்றாகக் கரைத்தார்.

பின்னர் சவர்க்காரத் தண்ணீர் நிறைந்த பாத்திரத்தை எடுத்துக் கொண்டு தோட்டத்துக்கு வந்தார்.

புற்தரையிலே வச தியாக அமர்ந்து கொண்ட குட்டி யானையார் - தும்பிக்கையால் சவர்க்காரத் தண் ணீரை உறிஞ்சி, ஊதிக் குமிழ்களைப் பறக்க விட்டார்.

சிறியதும், பெரியதுமான சவர்க்காரக் குமிழ்கள் அழகாகக் காற்றிலே அசைந்து பறந்தன.

ஆகா, என்ன அருமையான விளையாட்டு இது. ஒவ்வொரு நாளும் பின்னேரம் நண்பர் புலிக்குட்டியாருடன் சேர்ந்து இந்த விளையாட்டை நான் விளையாடலாமே.

விளையாட்டின் சுவாரசியத்தால் நேரம் போனதே தெரியவில்லை. அருமையான விளையாட்டு இது என்று மகிழ்ச்சியோடு நினைத்துக் கொண்டார் குட்டி யானையார்.

ஒவ்வொரு நாளும் பின்னேரம் இந்த விளையாட்டை நண்பர் புலிக் குட்டியாருடன் சேர்ந்து விளையாடலாம் என முடிவும் செய்து கொண்டார்.

பொழுது சாய்ந்ததால், விளையாட்டை இன்றைக்கு இத்தோடு நிறுத்திக் கொள்ளலாம் என யானைக் குட்டியார் நினைத்தார். சவர்க்காரத் தண்ணீர் நிறைந்திருந்த பாத்திரத்தையும் எடுத்துக் கொண்டு வீட்டுக்குள்ளே போகப்போன குட்டி யானையார் - தோட்டத்துப் புற்தரையிலே அழகாகக் காட்சி கொடுத்த பெரிய தொரு சவர்க்காரக் குமிழைக் கண்டு ஆச்சரியம் கொண்டார்.

அழகான அந்தச் சவர்க்காரக் குமிழினருகே ஓசைப் படாது மெதுவாகச் சென்றார் குட்டி யானையார்.

என்ன அதிசயம் இது. சவர்க்காரக் குமிழியினுள் வித்தியாசமான இரண்டு மலர்ச் செடிகள் காட்சி கொடுத்தன. நீல நில மலர்களைக் கொண்டிருந்த அந்த அதிசயச் செடிகள் - அழகாய் அசைந்தாடி, அற்புதமாய் நடனம் செய்தன.

அதைக்கண்ட குட்டி யானையார் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. நல்லதொரு மாயக் குமிழ் எனக்குக் கிடைத்து விட்டது என்று சொல்லித் துள்ளிக் குதித்தார்.

உடைந்து போகாது கவனமாக மாயக் குமிழை எடுத்துக் கொண்ட குட்டி யானையார் - வீட்டுக்குள் விரைந்து சென்றார். சிறிய தொரு மேசையின் மேலே தனது மாயக் குமிழைப் பத்திரமாக வைத்தார்.

மாயக் குமிழினுள்ளேயிருந்த அதிசயச் செடிகள் தமது அற்புதமான நாட்டியத்தை இன்னும் நிறுத்தவில்லை. செடிகளின் நடனத்தோடு சேர்ந்து ஒரு இனிமையான இசையும் இப்போது குமிழினுள்ளிருந்து கேட்கத் தொடங்கியது.

அருமை நண்பர் புலிக் குட்டியாரிடம் விரைந்து சென்று தனது மாயக் குமிழைப் பற்றிச் சொல்லத் துடித்தார் குட்டி யானையார்.

வீட்டின் ஜன்னல்களையும், கதவையும் மூடி வைத்து விட்டுப் புலிக்குட்டியாரின் வீட்டுக்கு விரைந்து சென்றார் குட்டி யானையார்.

புலிக்குட்டியாரிடம் சென்று அவரைக் கூட்டி வருவதற்குள் - பொல்லாத குணம் கொண்ட திருடர்கள் யாராவது தனது அருமையான மாயக் குமிழைத் திருடிச் சென்று விடுவார்களோ என்ற பயத்தால், கதவுடன் சேர்த்து வீட்டு ஜன்னல்களையும் இறுக்கமாக மூடி வைத்து விட்டு வெளியே சென்றார் குட்டி யானையார்.



ஆனந்தமாகத் தூங்கிக் கொண்டிருந்த புலிக்குட்டியாரைத் தட்டி எழுப்பினார் குட்டி யானையார்.

தன்னிடம் இருக்கும் மாயக் குமிழைப் பற்றிப் புலிக் குட்டியாரிடம் சொன்னார். தூக்கம் இன்னும் முழுவதுமாகக் கலைந் திடாது கலக்கத்தில் நின்றிருந்த புலிக் குட்டியார் - குட்டி யானையார் சொன்ன தைக் கேட்டுத் திரு திருவென விழித் தார்.

புலிக்குட்டியாரின் கையைப் பற்றி இழுத்துக் கொண்டு தனது வீட்டுக்கு வந்தார் குட்டியானையார். அற்புதமான தனது மாயக் குமிழைப் புலிக்குட்டியாருக்குக் காட்டினார்.

குட்டியானையாரின் மாயக் குமிழையும், அதனுள் நின்று நாட்டியமாடும் அதிசயமான செடிகளைக் கண்டும், கூடவே மாயக் குமிழினுள்ளிருந்து எழுந்து கொண்டிருக்கும் இனிமையான இசையைக் கேட்டும் பேச்சு மூச்சற்றுப் பிரமித்துப் போய் நின்றார் புலிக்குட்டியார்.

புலிக்குட்டியாரே, புலிக்குட்டியாரே, அற்புதமானதொரு மாயக் குமிழ் என்னிடம் இருக்கிறது. ஓடி வந்து அதை நீரும் பார்த்திடும். யானையாரே, யானையாரே அற்புதமான இந்த மாயக் குமிழ் எப்படி உம்மிடம் வந்து சேர்ந்தது? என்று வியப்பு நிறைந்த குரலில் குட்டியானையாரைப் பார்த்துக் கேட்டார் புலிக்குட்டியார்.

மாயக் குமிழைத் தான் அடைந்த கதையை விளக்கமாகப் புலிக் குட்டியாரிடம் சொன்னார் குட்டி யானையார். அப்படியா என்று சொல்லி ஆச்சரியத்தோடு குட்டி யானையார் சொல்லுவதைக் கேட்டு நின்றார் புலிக்குட்டியார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இளந்தேனீக்கள் கழக அங்கத்தவர்கள்



பெயர் :- சு.நர்மதன்
பாடசாலை:- யாழ். மத்திய கல்லூரி
தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
சத்திரம் வரைதல், கட்டுரை எழுதுதல், தொலைகாட்சி பார்த்தல்.



பெயர் :- ம.கிருத்தியா
பாடசாலை:- வல்வை மகளிர் மகா வித்தியாலயம்.
தரம் :- 06



பெயர் :- யே.கஜேந்திரன்
பாடசாலை:- நெடுந்தீவு மகா வித்தியாலயம்.
தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :- விளையாட்டு, படித்தல், தொலைக்காட்சி பார்த்தல், வானொலி கேட்டல்.


பெயர் :- யோ.கிருஷாளினி
பாடசாலை:- சரஸ்வதி மகளிர் வித்தியாலயம்.
தரம் :- 01
ஆர்வமுள்ள துறைகள் :- விளையாட்டு, தொலைக் காட்சி பார்த்தல்.

பெயர் :- அ.பிரியதர்சினி
பாடசாலை:- கற்கோவளம் மெதடிஸ்த தமிழ்க் கலவன் பாடசாலை.
தரம் :- 4
ஆர்வமுள்ள துறைகள் :- பத்திரிகை, சிறுகதை வாசித்தல், வானொலி கேட்டல்.

பெயர் :- வி.ஆஷா
பாடசாலை:- நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.
தரம் :- 7
ஆர்வமுள்ள துறைகள் :- கதைப்புத்தகம் வாசித்தல், ஓவியம் வரைதல்.

பெயர் :- இ.பார்த்திபன்
பாடசாலை:- குப்பிளான் விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம்.
தரம் :- 9

## கண்டுபிடியுங்கள்



இடப்பக்கம் பார்க்கும் பறவைகள் எத்தனை? வலப்பக்கம் பார்க்கும் பறவைகள் எத்தனை?
மொத்தமாக உள்ள பறவைகள் எத்தனை?

## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?
அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

5இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## இளந்தேனீக்கள் கழகம்
### விண்ணப்பம்

முழுப் பெயர் :........................................
கற்கும் பாடசாலை :........................................
கற்கும் தரம் :........................................
வீட்டு முகவரி :........................................
பிறந்த திகதி :........................................
ஆர்வமுள்ள துறைகள் :........................................
........................................

........................ ........................
திகதி ஒப்பம்

........................ ........................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

இங்கே மடிக்கவும்



# அன்புள்ள சிறுவர்களே!

உங்களைச் சுற்றி என்ன பொருட்கள் இருக்கின்றன. எவற்றையெல்லாம் உங்களால் பார்க்க முடிகிறது, உணரமுடிகிறது. இந்தக் கேள்விகளுக்கு நீங்கள் என்ன பதில் சொல்லுவீர்கள்?...

கதிரை இருக்கிறது, மேசை.. வீடு.. விளையாட்டுப் பொருட்கள்.. புத்தகங்கள்.. என்று சொல்லத் தொடங்குவீர்கள் அப்படித்தானே! நீங்கள் சொல்லுவது சரி. ஆனாலும் நீங்கள் சொல்லும் இந்தப் பொருட்களுடன் மேலும் ஐந்து வகையான விடயங்களை உங்களால் பார்க்க, உணர முடியும். என்ன இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லையா?

இந்த ஐந்தையும் நாங்கள் ஐம்பூதங்கள் என அழைக்கிறோம். இப்போது ஞாபகம் வந்துவிட்டதா? அந்த ஐம்பூதங்களும் நீர், காற்று, ஆகாயம், நிலம், நெருப்பு ஆகியவையே.

இந்த ஐம்பூதங்கள் மனிதனுடைய கட்டுப்பாட்டுக்குள் அடங்காதவை, மிகவும் பிரமாண்டமானவை, சக்தி வாய்ந்தவை, இவை மனிதனுடைய வாழ்க்கைக்கு இன்றியமையாத ஆதாரமாகவும், மனிதனுடைய தேவைகளைத் தீர்ப்பனவாகவும் விளங்குகின்றன.

ஒவ்வொன்றாக இவற்றைப் பார்ப்போம் -

காற்று இல்லாமல் நாங்கள் உயிர்வாழ முடியாது. சுவாசிப்பதற்குக் காற்று அவசியம். மூச்சை அடக்கினால் எமக்கு மூச்சுத் திணறல் எடுக்கும். அதேபோல நீரை எடுப்போமானால், நீர் எமக்குப் பல வழிகளில் உதவுகிறது.

சமைப்பதற்கு, அருந்துவதற்கு, உடுதுணிகளைத் துவைப்பதற்கு, பயிர்கள் செழித்து வளருவதற்கு எனக் கூறிக்கொண்டே போகலாம்.

அதேபோல் ஆகாயம், நிலம் நெருப்புப் பற்றி அடுத்தவாரம் பார்ப்போம்.

பாசமுடன் - சாரு அக்கா

## ஐந்தின் மகிமை

ஐம்பொறி -
மெய், வாய், கண், மூக்கு, செவி
ஐம்பூதம் -
நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம்.
ஐம்புலன் -
சுவை, ஓசை, ஊறு, நாற்றம், ஒளி.
ஐம்பால் -
ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால்.

## சென்றவார விடைகள்

1. 420
2. 16 பொம்மைகள்

## மூளைக்கு வேலை

1. ஒருவரிடம் 5 ரூபாய் நாணயங்கள் 6 இருக்கின்றன. அதில் ஒன்று மட்டும் எடை குறைந்த போலி நாணயம். ஒரு தராசை இரண்டு முறை மட்டும் பயன்படுத்தி, போலி நாணயத்தைக் கண்டுபிடிக்க வேண்டும். எப்படிக் கண்டுபிடிப்பீர்கள்?

## மேகம்

மேகங்கள் ஈரப்பதத்தால் ஆனவை. இந்த ஈரலிப்பானது இழக்கப்படும்போது அல்லது சேமிக்கப்படும்பொழுது மேகங்களின் வடிவங்கள் மாறுகின்றன. மேகங்களில் எவ்வாறு இந்த ஈரலிப்புத்தன்மை அடிக்கடி மாற்றமடைகிறது என நீங்கள் கேட்கலாம்.

மேகமானது வெப்பக்காற்றால் மோதப்படும்போது, மேகத்திலுடைய ஈரலிப்பு ஆவியாகும். இதனால் மேகத்தின் வடிவம் மாறுகிறது.

அதேநேரம், மேகங்களானது – குளிர்காற்றால் மோதப்படும்போது புதிய மேகங்கள் உருவாகிறது. அத்துடன் காற்றும் மேகங்களின் வடிவங்கள் மாறுவதற்குக் காரணமாக இருக்கிறது.

## பொது அறிவு

1. அணுக்கதிர் வீச்சு உடலில் பட்டால் முதலில் பாதிக்கப்படும் உறுப்பு எது? - எலும்பு, மச்சை
2. ஜப்பான் நாட்டின் தேசிய சின்னம் எது? - கூட்டுப்புழு.
3. ஒலிம்பிக் கொடியில் உள்ள ஐந்து வளையங்களில் ஆசியாக் கண்டத்தைக் குறிக்கும் நிற வளையம் எது? - மஞ்சள்.
4. சிலந்திக்கு எத்தனை கண்கள் உண்டு? - எட்டுக் கண்கள்.
5. எட்டாவது உலக மாநாடு எந்த நாட்டில் நடைபெற்றது? தென்னாபிரிக்காவில்.


ம. பார்த்தீபன்
தரம்
யாழ். மத்திய கல்லூரி

## கருமுகிலே வா!

வண்ணக் கருமுகிலே!
வானத்தில் ஏன் உயர்கிறாய்?
வெடித்துக் கிடக்கும்
வயல் நிலம் உனக்குத்
தெரியவில்லையா?
காய்ந்து போய் கிடக்கும்
குட்டுக் குளங்களைக்
காணவில்லையா?
புல்லின்றித் தவிக்கும்
புள்ளி மான்களும்,
பாலின்றிக் கதறும்
கன்றுக் குட்டிகளும்
உன்பார்வைக்குள்
அகப்படவில்லையா?
இன்னுமா உயரப் போகிறாய்?
இறங்கி வா!
மண்ணைக் கரைத்து
மரஞ்செடி கொடிகளைக்
குளிப்பாட்டு!
உன்னைக் கொடுத்து
உன்பணி முடித்து
வானேகு!

மா. கிருபா

## நான்கண்ட காலைக்காட்சி



எல்லா உயிரினங்களும் ஓய்வாக இரவில் நித்திரை செய்யும். அதிகாலையில் சிறிய குருவிகள் சத்தங்கள் இடும். வண்டுகள் ரீங்காரமிடும். குயில் தங்கள் இனிய குரல்களால் கூவும். காகங்கள் கரையும். சேவல் கூவும். கிழக்கு அடிவானம் சிவக்கும். சூரியன் மெல்ல மெல்ல எழுந்து வருவான். உயிரனங்கள் எல்லாம் நித்திரை விட்டு எழும். கன்றுகள் தாவித்தாவி தாயின் பின்னே ஓடும். தாவரங்கள் எல்லாம் புதுப்பொலிவு பெறும். பகல் பொழுது வளர்ந்து வரும். காலைக் கடன்களை முடித்துக் கொண்டு சிறுவர்கள் பள்ளி செல்வார்கள். பெரியவர்கள் உழைப்பை நாடிச் செல்வார்கள். சூரியகாந்தி மலர் எழுந்து வரும் சூரியனை வரவேற்க கிழக்கு நோக்கிக் காத்திருக்கும்.

ஜே. கபிரா , ஆண்டு - 4
உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## றுவான் தாக்கப்பட்ட வழக்கு

# விசாரணையை துரிதப்படுத்த சி.ஐ.டியினருக்குப் பணிப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் தாக்கப்பட்டமை தொடர்பான வழக்கைத் துரிதப்படுத்துமாறு கொழும்பு குற்றப்புலனாய்வு அதிகாரியை யாழ். மாவட்ட நீதிவான் கேட்டுள்ளார்.

கொழும்பு குற்றப்புலனாய்வுத் தலைமையகத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்துள்ள பத்மஸ்ரீ முனசிங்க எனும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகரையே அவர் இவ்வாறு கேட்டுக்கொண்டார்.

இதேவேளை, அடையாள அணிவகுப்பு காலதாமதமாக நடந்துள்ளதாக யாழ்.மனித உரிமை ஆணைக்குழு அலுவலக இணைப்பாளர் றுவான் சந்திரசேகர நீதிபதியிடம் அதிருப்தி தெரிவித்தபோதிலும், கடந்த 12 ஆம் திகதியே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இதன்படி மறுநாள், அதாவது 13 ஆம் திகதியே அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்டது.

வழக்குத் தாக்கல் செய்வதிலேற்பட்ட தாமதமே அடையாள அணிவகுப்பை நடந்த தாமதம் ஏற்படக் காரணமானது என யாழ்.மாவட்ட நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா தெரிவித்தார்.

# அபாயகரமான நிலையிலுள்ள அனலைதீவு கடற்கரைப் பாலம்



(நெடுந்தீவு)

அனலைதீவு பகுதியில் மக்கள் பாவனைக்கென உள்ள துறைமுகப் பகுதி மிகவும் மோசமான நிலையில் பழுதடைந்துள்ளதால், அதனூடாக மக்கள் நாளாந்தம் அச்சத்துடனேயே தங்கள் பயணத்தைத் தொடர்கின்றனர்.

பனங்குற்றிகளாலான பாலமே தற்போது மக்கள் பாவனையில் உள்ளது. இந்தப் பாலத்தினூடாக பாரமான பொருட்களை இடம்நகர்த்துவதில் மக்கள் பெரும் இன்னல்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இப்பாலத்தைத் திருத்தம் செய்து, ஒரு நிரந்தர பாலமாக தங்களது பாவனைக்கு உரிய அதிகாரிகள் விடவேண்டுமென, மக்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பு நிலவுகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (113)

# யாழ்ப்பாண மாவட்டத்தில் 29,000 புதிய வாக்காளர்கள்

யாழ். மாவட்டத்தில் இந்த வருடம் புதியவாக்காளர்களாக 29,000 பேர் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் 7,000 பேர் வாக்காளர் பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

ஊர்காவற்துறை தேர்தல் தொகுதியில் 1,750 பேர் புதிதாக சேர்க்கப்பட்டு, 910 பேர் நீக்கப்பட்டுள்ளனர். வட்டுக்கோட்டை தேர்தல் தொகுதியில் 2,300 பேர் சேர்க்கப்பட்டு, 1,210 பேர் நீக்கப்பட்டுள்ளனர்.

இதேபோன்று காங்கேசன்துறை தேர்தல் தொகுதியில் 2,953 பேர் சேர்கப்பட்டு 24 பேர் நீக்கப்பட்டுள்ளனர்.

இதேபோன்று மானிப்பாய் தேர்தல் தொகுதியில் 3,400 பேர் சேர்க்கப்பட்டு 700 பேர் நீக்கப்பட்டுள்ளனர். கோப்பாய் தேர்தல் தொகுதியில் 2,600 பேர் சேர்க்கப்பட்டு 650 பேர் நீக்கப்பட்டுள்ளனர்.

உடுவில் தொகுதியில் 1,906 பேர் சேர்க்கப்பட்டு 940 பேர் நீக்கப்பட்டுள்ளனர். பருத்தித்துறை தொகுதியில் 2,031 பேர் சேர்க்கப்பட்டு 634 பேர் நீக்கப்பட்டும் உள்ளனர்.

சாவகச்சேரி தேர்தல் தொகுதியில் 3,500 பேர் சேர்க்கப்பட்டு 615 பேர் நீக்கப்பட்டுள்ளனர். நல்லூர் தேர்தல் தொகுதியில் 3,000 பேர் சேர்க்கப்பட்டு 1,000 பேர் நீக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.தேர்தல் தொகுதியில் 3,489 பேர் சேர்க்கப்பட்டு 360 பேர் நீக்கப்பட்டுள்ளனர் என, யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

### ஈக்களை கட்டுப்படுத்த மாநகரசபையுடன் தொடர்புகொள்ளவும்

தற்போது பொது இடங்களில் உள்ள உணவகங்களிலும், வீடுகளிலும் பெருகிவரும் ஈக்களின் தொல்லையைக் கட்டுப்படுத்த யாழ்.மாநகரசபையின் சுத்திகரிப்புப் பிரிவினரோடு தொடர்புகொள்ளுமாறு, யாழ். மாநகரசபையினர் அறிவித்துள்ளனர்.

ஈக்களால் தொற்று நோய்கள் பெருமளவு பரவும் அபாயம் காணப்படுவதால் - குறிப்பிட்ட பகுதிகளிலோ அல்லது கடைகளிலோ, வீடுகளிலோ, ஈக்கள் அதிகமாக இருக்கும் பட்சத்தில் யாழ்.மாநகர சபையினரின் சுத்திகரிப்புப் பிரிவினரோடு தொடர்புகொண்டால் அவர்கள் குறிப்பிட்ட இடங்களைப் பார்வையிட்டு அதற்கான மருந்துகளைத் தெளிக்க ஆவன செய்வார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# பரிசுபெற்ற மாணவர்கள் பிரதேச செயலகத்தால் கௌரவிப்பு

நல்லூர் பிரதேச செயலகத்தால் நடத்தப்பட்ட சிறுவர் தின, முதியோர்தினப் போட்டிகளில் பங்குபற்றிய யாழ். நல்லூர் ஞானோதயா வித்தியாலய மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இந்தப் போட்டிகளில் சிறுவர் கவிதை ஆக்கல் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டியதற்காக இப்பாடசாலையைச் சேர்ந்த வி.விபுலசாந், ச.தனுசன் ஆகிய மாணவர்கள் நல்லூர் பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதியோர்தின - சிறுவர்தினக் கொண்டாட்டத்தில் பரிசுகளைப் பெற்றுக் கொண்டனர்.

அடிப்படை வசதிகள் குறைவாக இருந்தாலும், இந்தப் பாடசாலை மாணவர்கள் கோட்ட மட்டத்தில் 30 இற்கு மேற்பட்ட பாடசாலைகளோடு போட்டியிட்டு சிறுவர் கவிதைப் போட்டியில் வெற்றியீட்டியமை குறிப்பிடத்தக்கது.

அத்தோடு இப்பாடசாலை மாணவர்கள் புலமைபரிசில் பரீட்சையிலும் நல்ல பெறுபேறுகளைப் பெற்றிருப்பதோடு, நல்லூர் கோட்டமட்ட சைவ நெறிப்போட்டிகளிலும் வெற்றிபெற்றிருப்பதும் குறிப்படத்தக்கது.

# நெடுந்தீவில் மீளக்குடியமர்ந்தோருக்கு ஐ.ஓ.எம். நிறுவனத்தினர் உதவி!

(நெடுந்தீவு)

இந்தியாவில் இருந்து கடந்த ஏப்ரல் 15 ஆம் திகதிக்குப் பின்னர் நெடுந்தீவில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு, தொழில் தொடர்வதற்கான உபகரணங்கள் ஐ.ஓ.எம் நிறுவனத்தால் வழங்கப்பட்டது.

கடற்தொழில் செய்யும் 23 குடும்பங்களுக்கு சுமார் 12 ஆயிரம் ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்களும், இரண்டு விவசாயக் குடும்பங்களுக்கு இதே பெறுமதியான விவசாய உபகரண்ங்களும் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை, இந்தக் குடும்பங்களுக்கு தொடர்ந்து 6 மாத காலத்துக்கு தலா 1,500 ரூபா வீதம் உதவிக் கொடுப்பனவும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு, முதலாம் கட்டக் கொடுப்பனவும் இம்மாதம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)

# பொருட்காட்சிப் போட்டியும் பரிசளிப்பு விழாவும்!

வடமராட்சி கல்வி வலயமும், வடமராட்சி ஒளி நிறுவனமும் இணைந்து சர்வதேச தினங்களை நினைவூட்டும் வகையில் பொருட்காட்சிப் போட்டியையும், வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினம், உலக சுற்றாடல் தினம், சர்வதேச தினங்கள் தொடர்பான பொருட்காட்சிப் போட்டி ஆகியவற்றில் முதல் 5 இடங்களையும் பெற்ற மாணவர்களுக்கு பரிசில் வழங்கும் வைபவமும் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வு நாளை காலை 9.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் வடமராட்சி ஒளி நிறுவனத் தலைவர் வி.நிவேகீதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதற்குப் பிரதம விருந்தினராக யாழ். போரூட் திட்ட முகாமையாளர் அன்டர்ஸ் ஸ்ரென்விக்கும், சிறப்பு விருந்தினர்களாக கரவெட்டி பிரதேச செயலர் சி.சத்தியசீலன், வடமராட்சி பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (12)

# சின்னஞ்சிறு செய்திகள்

### பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்குகள்

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளில் கல்வி கற்கும் கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரண வகுப்பு மாணவர்களுக்கு கல்வி முன்னேற்றத்துக்கான வழிகாட்டல்களை வழங்க யுனிசெவ் நடவடிக்கை எடுத்துள்ளது.

தென்மராட்சி பாடசாலை மாணவர்களின் கல்வி தர மேம்பாட்டைக் கவனத்திற்கொண்டே இவ்வாறான வழிகாட்டல்களை நடத்த யுனிசெவ் முன்வந்துள்ளது.

அந்த அடிப்படையில் இன்று பாடசாலை மட்டத்திலான கணித, தமிழ், ஆங்கில பாட வழிகாட்டல் கருத்தரங்குகளை யுனிசெவ் ஒழுங்குசெய்துள்ளது.

### சரஸ்வதி பாமாலை அன்பளிப்பு

சந்நிதியான் ஆசிரமம்- நவராத்திரி விழாவை முன்னிட்டு, 'சரஸ்வதி பாமாலை' என்னும் நூலை அச்சிட்டு இலவசமாகப் பாடசாலைகள்தோறும் வழங்கிவருகிறது. நவராத்திரி விழாக் காலத்தில் இந்தப் பாமாலையைப் படித்து மாணவர்கள் பயன்பெற வேண்டும் என்னும் நோக்கத்தோடு சந்நிதியான் ஆசிரமம் இந்த நூலை வெளியிட்டுள்ளது. (17)

### பனை விதைகள் நடுகை

அண்மையில் வடமராட்சி ஒளி நிறுவனத்தால், ஒளி நிறுவன ஏற்பாட்டாளர் இ.ரெனிஸ்லாஸ் தலைமையில் 14 பேர் கொண்ட குழுவால், வல்லை வெளியில் 15 ஆயிரம் பனை விதைகள் விதைக்கப்பட்டன.

பனை வளத்தை அபிவிருத்தி செய்யவும், மண்ணரிப்பைத் தடுத்து, மழை வீழ்ச்சியை அதிகரித்து, சுற்றாடலைப் பாதுகாக்கும் உணர்வுடன் இந்தப் பனை விதைகள் விதைக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.(12)

### கல்வியங்காடு சந்தையில் சுகாதாரச் சீர்கேடு

(யாழ்ப்பாணம்)

யாழ். நல்லூர் கல்வியங்காடு சந்தையில் கழிவுநீர் தேங்கிநிற்பதால், சந்தை பாவனையாளர்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

தற்போது மழை நீர் பொதுச்சந்தைக்குள் செல்லும் வாயில் புறம் தேங்கிநின்று சகதியாகக் காணப்படுவதால், உள்ளே செல்வதற்கு சிரமமாகவுள்ளதாகவும் -

சந்தையைச் சுற்றிலும் நீர் தேங்கிக் காணப்படுவதாகவும், அத்தோடு மீன் சந்தையைச் சூழவுள்ள பகுதிகள் அசுத்தமாகவும் காணப்படுகிறது.

### பொது நூலகத்தில் விசேட செயற்திட்டம்

(யாழ்ப்பாணம்)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு, யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்தில் விசேட செயற்பாடுகள் கடந்த முதலாம் திகதி தொடக்கம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

இதன்படி நூலகம் காலை 9 மணி தொடக்கம் மாலை 7 மணி வரை திறக்கப்பட்டிருக்கும்.

பாடசாலை மாணவர்கள் நூல் இரவல் பெறுவதற்கு வசதியாக அவர்களை அங்கத்தவர்களாகச் சேர்த்துக் கொள்வதற்கு, பாடசாலை அதிபரின் சிபார்சுடன் வருடாந்தக் கட்டணமாக 100 ரூபாவும் பாதுகாப்பு வைப்புப் பணமாக 100 ரூபாவும் செலுத்தி அங்கத்தவராக முடியும்.

### அடிக்கல் நாட்டும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபைக்கென அமைக்கப்படவுள்ள சுற்றாடல், திட்டமிடல் மற்றும் முகாமைத்துவ அலுவலக கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டும் வைபவம் இன்று மாலை இடம்பெறவுள்ளது.

இந்தக் கட்டடத் தொகுதியானது முன்னைய மாநகரசபை வளாகத்தினுள்ளேயே அமைக்கப்படவுள்ளதாக யாழ்.மாநகர ஆணையாளர் கலாநிதி க.குணராசா தெரிவித்தார்.

இன்று மாலை 3.30 மணியளவில் குறிப்பிட்ட இடத்தில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதனால் இந்தக் கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

### பரமானந்தா ஆசிரமத்திற்கு பொருட்கள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

கரவெட்டியிலுள்ள ஸ்ரீ பரமானந்தா சிறார், முதியோர் இல்ல ஆசிரமத்துக்கு பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளர் தையல் இயந்திரம் ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இந்த இல்லத்தில் தங்கியுள்ள மாணவர்களில் தொழிற்பயிற்சி பெறுவோர் இதனால் நன்மையடைவார்கள் என ஆசிரம அலுவலர் தெரிவித்தார்.

இதேவேளை, இந்த இல்லத்துக்குக் கரவெட்டியைச் சேர்ந்தவரும், [illegible] குமார் தொலைக்காட்சிப் பெட்டியொன்றையும் அன்பளிப்பாக வழங்கியுள்ளார். (14)

### புனரமைக்கப்படாத நாவலடி வீதி

யாழ்.வண்ணை வடமேற்கில் அமைந்துள்ள நாவலடி வீதி பல வருடங்களாகச் செப்பனிடப்படாமல் குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது.

அப்பகுதியில் பேச்சி அம்பாள் தேவஸ்தானம் அமைந்துள்ளது. இரவு நேரங்களில் அவ்வீதியைப் பயன்படுத்தும் மக்கள் பல அசௌகரியங்களுக்கு ஆளாகி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதனைச் சூழவுள்ள முருகமூர்த்தி வீதி, தாமரை வீதி, கேசாவில் வீதி ஆகியன புனரமைக்கப்பட்டுள்ளன.

நாவலடி வீதி மற்றும் துரைராசா வீதி ஆகியன பல வருடங்களாகப் புறக்கணிக்கப்பட்ட வீதிகளாக இருந்துவருவது குறிப்பிடத்தக்கது.(206)

### சாகித்திய இசைக்குழுவினரின் இசை நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தையொட்டிய சிறப்பு கலை நிகழ்வுகள் - இன்று யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளன.

இந்த விழாவை யாழ். லயன்ஸ் கழகத்தினரும், விழிப்புலன் இழந்தோர் சங்கமும் இணைந்து நடத்தவுள்ளன.

இதில் விழிப்புலனற்ற இசைக் கலைஞர்களின் 'சாகித்தியம்' இசைக்குழுவின் இசை நிகழ்ச்சியும் இலவசமாக ரசிகர்களுக்காக அரங்கேறவுள்ளது.

அனைவரும் இந்த விழாவில் கலந்துகொண்டு நிகழ்வுகளைக் கண்டுகளித்து பார்வையற்றவர்களையும் ஊக்குவிக்குமாறு, யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தினர் கேட்டுள்ளனர்.

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : க.கஜானா
முகவரி : ரெட்றோஸ் பாம், தொண்டமனாறு

எட்டாவது அகவையில்



பெயர் : க. வருண்
முகவரி : தாமரைக் குளம் துன்னாலை மத்தி, கரவெட்டி.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:



கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் ஒப்பம்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தென்னிலங்கையிலுள்ள பல தீய சக்திகள் எம்மை அழிப்பதற்கு கங்கணங்கட்டுகின்றன!

## செல்வம் அடைக்கலநாதன் தெரிவிப்பு



தென்னிலங்கை சமூகம் எங்களைக் கண்டு அச்சம் கொண்டுள்ள நிலையில் நாங்கள் அவர்களைக் கண்டு அச்சம் கொள்ளத் தேவையில்லை என, வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைககலநாதன் லெப்ரினன்ட் கேணல் விக்ரரின் 18 ஆம் ஆண்டு நினைவு நாளில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

இந்த போர்நிறுத்த ஒப்பந்தம் எங்களை நிறைய மாற்றத்திற்கு உள்ளாக்கியுள்ளதை நாங்கள் காணக்கூடியதாக உள்ளது. சமாதானம் வந்துவிட்டது என்று நாங்கள் நினைக்கவில்லை.

எங்கள் எல்லோரையும் எப்படி அழிக்கலாம் என தென்னிலங்கையில் உள்ள தீய சக்திகள் முனைந்து கொண்டிருக்கின்றன. நாங்கள் அனைவரும் ஒற்றுமை அடையவில்லையென்றால் எங்களை யாரா லும் காப்பாற்ற முடியாது. தமிழீழத் தேசியத் தலைவருடைய காலத்திலேதான் ஒரு தீர்வு வரவேண்டும் என நாம் எல்லோரும் விரும்புகின்றோம். எனவே நாம் ஒற்றுமையாக, எம்மை அழிக்க நினைக்கின்ற எதிரியை அழிப்பதற்கு எல்லோரும் ஓரணியில் அணி திரளவேண்டும்.

எங்கள் மீது எத்தனையோ அடக்குமுறைகளைச் செலுத்துகின்ற போதெல்லாம் அதை உடைத்தெறிந்து முன்னேறி வந்துள்ளோம்.

அந்த வகையிலே இந்த மன்னார் மண்ணிலே பொங்கு தமிழ் நடத்தவில்லையா? அரசியல் போராளிகளை அழைத்து வரவேற்பு செய்யவில்லையா? ஏன் நாங்கள் எங்களுடைய மண்ணிலே பிறந்து முதன் முதலாக, விடுதலைப் புலிகள் இயக்கத்திலே இணைந்து வீரகாவியமான லெப்டினன்ட் கேணல் விக்ரரின் நினைவு நாளை அனுஷ்டிக்கவில்லையா?

எதிரியானவன் எந்தவேளையிலும் மக்களை அடக்கியாள முற்படுகின்ற போதெல்லாம் அவற்றையெல்லாம் உடைத்தெறிந்து போராடத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில் எமது மக்கள் செயற்பட்டு வருகின்றனர்.

இவற்றை விட மேலும் சிறப்பாக எமது எழுச்சியை வெளிப்படுத்தியும் எதிரிக்கு தக்க பதில் கொடுக்க வேண்டும்.

மன்னார் மண் படையினருக்கு கைகட்டி நிற்கக்கூடாது. அதற்கான வாய்ப்பை நாம் ஏற்படுத்திக்கொள்ளவும் கூடாது. இன்றைய அரசு பேச்சுக்களை ஆரம்பிப்பது என்று கூறி காலத்தை வீணடித்து செல்கின்றது. ஆலோசனை சபை என்று கூறி நாட்களை கடத்திக்கொண்டு வெளிநாடுகளிலே பணத்தைப் பெற்றுவிடலாம் என்று நினைதது் கொண்டு அம்மையார் வாலாட்டிக் கொண்டு வருகிறார்.

தென்னிலங்கை சமூகம் எங்களை கண்டு அச்சம் கொண்டுள்ள நிலையில் இருக்கின்றபோது நாங்கள் அவர்களைக் கண்டு அச்சம் கொள்ளத் தேவையில்லை. அவர்கள் இதனை உணர்ந்து கொண்டுள்ளபோது நாங்கள் ஏன் உணர்ந்து கொள்ளாமல் இருக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

## வன்னிப் பதிவுகள்

### புனரமைப்பு பணிகள்

(பூநகரி)

பூநகரி பிரதேசத்தில் கெயார் நிறுவனத்தின் நிதியுதவியுடன் பல்வேறுபட்ட புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பூநகரி - ஆலங்கேணி பகுதியில் உள்ள புறாக்குளம், மட்டுவில் நாடு, கறுக்காய், பள்ளக்குளம், கௌதாரி முனை ஆகிய இடங்களில் உவர்நீர் அணைத்தடுப்பு அமைக்கும் திட்டம் கெயார் நிறுவனத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ளதாக, கமநல உத்தியோகத்தர் சுந்தரமூர்த்தி தெரிவித்தார்.

## கழிப்பறை இன்றி இயங்கும் பரந்தன் பொதுச் சந்தை

பரந்தன் பொதுச்சந்தைப் பகுதியில் கழிப்பறைகள் அமைக்கப்படாததால் சந்தைக்கு வரும் மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். இதனால் அப்பகுதி சுகாதார சீர்கேட்டையும் எதிர்நோக்குகின்றது.

கரைச்சி பிரதேச சபையின் கட்டுப்பாட்டிலுள்ள இந்த பொதுச்சந்தையின் அருகில் போக்குவரத்து பேரூந்து தரிப்பிடமும் இருப்பதால் மக்கள் கழிப்பறைகளைத் தேடி அலைந்து திரிகின்றனர்.

இந்த விடயத்தில் கரைச்சி பிரதேச சபை எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளாததையிட்டு மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

## குடிநீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கிராம அபிவிருத்தி சங்கம் நடவடிக்கை

மன்னார் பிரதேசத்தில் குடிநீரை பெறுவதில் சிரமங்களை எதிர்நோக்கும் குடும்பங்களுக்கு, திருப்பிச் செலுத்தும் கடன் திட்டத்தின் கீழ் குழாய் மூலம் நீரைப் பெற்றுக் கொடுப்பதற்கு அங்குள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்கள் நடவடிக்கை எடுத்துள்ளன.

மன்னார் நகரை அண்டிய பிரதேசங்களில் வாழும் வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு தனித்தனியான குழாய் மூலம் நீர் வழங்கப்படவுள்ளது. ஒவ்வொரு குடும்பங்களுக்கும் தனித்தனியாகக் குழாய் மூலம் நீர் விநியோகம் செய்வதற்கு தலா 15 ஆயிரம் ரூபா தேவையாகவுள்ளது.

இதனை கடன் அடிப்படையில் வழங்குவதற்கு பனை மற்றும் சேவாலங்கா நிறுவனங்கள் வழங்க முன்வந்துள்ளன.

இந்த கடன் மன்னாரில் உள்ள கிராம அபிவிருத்திச் சங்கம் மூலம் அல்லது மாதர் சங்கம் மூலம் செலுத்தமுடியும். இந்தக் குழாய் நீரானது 1000 குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தால் பெண்களுக்கான பயிற்சி வகுப்பு!

(கிளிநொச்சி)

கிளிநொச்சிப் பிரதேச பெண்கள் புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தால் பல்வேறு தொழில்சார் பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பெண்கள் புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தின் கீழ் இயங்கும் பெண்கள் தொழிற்பயிற்சி நிலையத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் தொழில்சார் பயிற்சிகளில், மரவேலைப் பயிற்சியில் 30 பெண்களும், தையல் பயிற்சியில் 20 பெண்களும், இலத்திரனியல் கற்கை நெறி பயிற்சியில் 60 பெண்களும், தட்டெழுத்து பயிற்சி, தட்டெழுத்து திருத்துதல் போன்றனவற்றில் 30 பெண்களும், பூவேலை, தலையலங்காரம் போன்றவற்றில் 15 பெண்களும், கணினி கற்கை நெறியில் 20 பெண்களும் தொழில்சார் பயிற்சிகளை கற்று வருகின்றனர்.

## யாழ். மாவட்டத்தில் புலமைப் பரிசில் பரீட்சையில் முதல் 10 இடங்களைப் பெற்ற மாணவர்கள்..



## முல்லைத்தீவு மாவட்டத்தில் மாதாந்த வீரமுரசு நிகழ்வு!

முல்லைத்தீவு - பாண்டியன் குளம் பிரதேசத்தில் மாதாந்த வீரமுரசு நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை முல்லைத்தீவு மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் மயூரன ஏற்றி வைத்தார். ஈகச்சுடரை ஒட்டங்குளம் வலயப் பொறுப்பாளர் குமரன் ஏற்றி வைத்தார். மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

இந்த நிகழ்வில் சிறப்புரைகளை பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் புனிதன் ஒட்டங்குளம் தேசிய எழுச்சி பேரவை செயலாளர் தனிநாயகம், முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சின்னண்ணன் ஆகியோர் நிகழ்த்தினர். தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் இடமபெற்றன.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்டம் - கரிப்பட்ட முறிப்பு பிரதேசத்தில் மாதாந்த வீரமுரசு நிகழ்வு இன்று இடம்பெறவுள்ளது. அத்துடன், இந்தப் பிரதேச எல்லைப் படை மாவீரர்களின் பெற்றோர்கள், குடும்பத்தினர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

### லொறி மோதி ஒருவர் பலி

பரந்தன் வீதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். நேற்றுக்காலை 8.30 மணியளவில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தவர் மீது எதிரே வந்த லொறி மோதியதிலேயே அவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் செல்வா நகரைச் சேர்ந்த கிருஸ்ணபிள்ளை வெங்கடாசலம் (வயது 55) என்பவரே உயிரிழந்தவராவார்.

இச்சம்பவம் பூநகரி - பரந்தன் வீதியிலுள்ள ஓவசியர் கடைச் சந்தியில் இடம்பெற்றது.

### உதைபந்தாட்டப் போட்டி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டம் பூநகரி பிரதேசத்தில் மாவீரர் நினைவு வெற்றிக் கேடயத்துக்கான உதைபந்தாட்டப் போட்டி நேற்று ஆரம்பமானது.

தமிழீழ விளையாட்டுத் துறையினரின் ஏற்பாட்டில் பூநகரி பிரதேச விளையாட்டுத் துறையினரால் பூநகரி இரணை மாதா நகர் விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமான உதைபந்தாட்டப் போட்டி - இன்றும், நாளையும் இடம்பெறவுள்ளன. இந்தப் போட்டியில் 32 அணிகள் கலந்துகொள்ளவுள்ளன.

## கல்மடு நகர் பிரதேசத்தில் ஊக்குவிப்பு கடன் வழங்கல்

கல்மடு நகர் பிரதேசத்தில் நந்தனம் சேமிப்பு கடன் திட்டத்தின் கீழ் 15 பயனாளிகளுக்கு ஊக்குவிப்புக் கடன் கடந்த வியாழக்கிழமை வழங்கப்பட்டது. இந்த நிகழ்வு நந்தவம் சேமிப்புக்கடன் குழுத் தலைவர் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் மங்கள விளக்கை கல்மடுநகர் கிராம உத்தியோகத்தர், கண்டாவளைப் பிரதேச கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

அடுத்து அகவணக்கத்துடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. பயனாளிகளுக்கு 500 ரூபா வீதம் ஊக்குவிப்புக்கடன் வழங்கப்பட்டது. இந்தக் கடனை கண்டாவளை அபிவிருத்தி இணைப்பாளர் வழங்கினார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதுஓர் நோய்.

திருக்குறள்

# நமது நோக்கு

## மாற்று யோசனைகளா? ஏமாற்று யோசனைகளா?

சமாதான முயற்சிகள் தொடர்பாக அரசின் கூட்டணிக் கட்சிகளிடையே இன்னமும் கருத்தியல் ரீதியிலான உடன்பாடொன்று எட்டப்படும் சாத்தியக்கூறுகள் எதுவும் தென்படாத நிலையில், ஏற்கனவே தமிழீழ விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாக அதிகாரசபை குறித்த யோசனைகளுக்கு மாற்றீடாக புதிய யோசனைகளை அரசு தயாரித்து முடித்துள்ளதாகவும் அதனை விடுதலைப்புலிகளிடம் நோர்வே நாட்டு சமாதான அனுசரணையாளர் மூலமாக கையளிப்பதற்கான சூழலுக்காகக் காத்திருப்பதாகவும், அமைச்சரவைப் பேச்சாளர் மங்கள சமரவீர அமைச்சரவைத்தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார். ஏற்கனவே சமாதான முயற்சிகள் மீதான அரசின் அணுகுமுறைகள் யாவும் காலத்தை கடத்தும் – உள்நோக்கத்துடன் கூடிய மூலோபாயங்களின் அடிப்படையிலேயே அரசால் நகர்த்தப்பட்டு வருவது தெரிந்த விடயமே.

ஜனாதிபதியோ அவரது தோழமைக்கட்சிகளோ இதுநாள் வரைக்கும் ஒன்றாக அமர்ந்து ஒரே நோக்குடன் சமாதான முயற்சிகளை அரசு எப்படி ஆக்கபூர்வமான முறையில் முன்னெடுக்கவேண்டும் என்பது குறித்து ஓரிடத்தில் அமர்ந்து ஆலோசனைகளைப் பகிர்ந்துகொண்டதாக வரலாறே கிடையாது.

மாறாக சமாதான முயற்சிகளை அதன் ஆரம்பத்திலிருந்தே எ[illegible]த் தடுப்பது, எதிர்ப்பது மற்றும் நிராகரித்துக் குழப்புவது என்பது தொடர்பாக ஒருமித்த சிந்தனையும், செயற்பாடும் கொண்டவர்களாகவே இருந்துவந்துள்ளதுடன், இயங்கியும் வந்துள்ளனர் என்பது வெளிப்படையாகத் தெரிந்த விடயமேயாகும்.

உண்மையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற கூட்டமைப்பானது – ஐக்கிய தேசிய முன்னணியை பதவியில் இருந்து அகற்றுமாறு, சமாதான நகர்வுகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படாது தடுப்பது நோர்வேயை அனுசரணையாளர் பொறுப்பிலிருந்து அகற்றுவது விடுதலைப்புலிகளை மீண்டும் போர்முனையில் தோற்கடிப்பது என்ற கோட்பாடுகளின் அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டது என்பது உண்மையேயாகும்.

அந்தக்கூட்டணியில் உள்ள சிறிலங்கா சுதந்திரக்கட்சி, மக்கள் விடுதலை முன்னணி என்ற ஜே.வி.பி., மக்கள் ஐக்கிய முன்னணி போன்ற பிரதான கட்சிகள் அனைத்துமே சமாதான பேச்சுவார்த்தையின் சகல அம்சங்களையும், விடுதலைப்புலிகளையும் முழுமையாக எதிர்க்கும் பேரினவாதக் கடும்போக்காளர்களைக் கொண்டவர்களேயாகும்.

இந்தக் கட்சிகள் எல்லாக் காலத்திலும் தமிழர் விரோதப் போக்கினை தமது பிரதான அரசியல் இலக்காகக் கொண்டியங்[illegible]வையாகும்.

இவர்களால் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு எக் காலத்திலும் ஒரு நியாயமான, நிலையான அரசியல்தீர்வை ஆத்மார்த்தமாக முன்வைக்கும் ஜனநாயகத் தளத்தில் நின்று செயற்படவே முடியாது என்பதையே இவர்களின் கடந்தகால அரசியல் வரலாறு நிரூபித்து நிற்கிறது.

அப்படி ஒரு தீர்வை தேசிய நெருக்கடி மற்றும் சர்வதேச அழுத்தம் ஆகியவற்றின் காரணமாக முன்வைக்கவேண்டிய வரலாற்று அவசியம் ஏற்பட்டாலும், அதனை அவர்களால் முழுமையாக அமுல்படுத்தும் நேர்மை இருக்குமா என்பது பதில்கூறமுடியாத கேள்வியேயாகும்.

உண்மையில் அரசுக்கும் – ஜனாதிபதிக்கும் இனப்பிரச்சினையை நேர்மையாக – விரிவான – மற்றும் ஆழமான பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்க்கும், தேசிய அக்கறையுடன் கூடிய வேணவா இருக்குமாயின் வெறுமனே புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு தமிழ் மக்களின் இயல்பு வாழ்வை மீண்டும் ஏற்படுத்தி அவர்களுக்கு சிங்கள அரசுகள் மீதுள்ள கடந்தகால சந்தேகங்களைப் போக்கி நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கு ஒரே மார்க்கமும், தற்காலிக ஏற்பாடுமான இடைக்கால நிர்வாக அதிகாரசபை என்ற விடுதலைப் புலிகளின் யோசனையை ஏற்றுக்கொண்டு பரஸ்பரம் புரிந்துணர்வுடன் கூடிய வகையில் பேச்சுக்களை ஆரம்பித்திருக்கமுடியும்.


ஆனால், அரசும் ஜனாதிபதியும், விடுதலைப் புலிகளின் யோனைகளை சந்தேகத்துடன் அணுகுவதுடன் அதனைப் பற்றி உண்மைக்கு மாறான பொய்ப்பிரசாரங்களையும் செய்து கொண்டே மாற்றுயோசனைகளை முன்வைக்க முயல்வது அரசினதும், ஜனாதிபதியினதும் மீதான அவநம்பிக்கையை அதிகரிக்க வைக்கிறது என்பதே உண்மையாகும். அரசின் புதிய யோசனைகளை மாற்றுயோசனைகளாகவன்றி ஏமாற்று யோசனைகளாகவே தமிழ் மக்கள் சந்தேகப்படுவது நியாயமானதேயாகும்.

என்னை சந்தேகித்துக்கொண்டு தன்னை நம்புமாறு கூறுபவனை நம்பினால் நான் புத்திசுவாதீனமற்றவனாகவே இருக்க முடியும்.

இதே ஜனாதிபதி – பதவிக்கு வந்த ஆரம்பகாலம் முதல் அக்கினி சுவாலை நடவடிக்கையில் தோல்வியடையும் வரை அதிகாரப் பரவலாக்கல் தீர்வுப் பொதியென்ற மந்திரத் தீர்வு யோசனைகளை தம்மிடம் இருப்பதாக தனது தேசத்தையும், சர்வதேசத்தையும் 'பேய்க்காட்டி' வந்த வரலாறு முடிந்து வெகுகாலம் செல்லாத நிலையில் இந்த 'ஏ'மாற்று யோசனைகளை முன்வைக்கத் தயார் என்று அவரது அமைச்சரவைப் பேச்சாளர் அறிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் இனியும் ஏமாறத் தயாரில்லை என்பதை அரசும் ஜனாதிபதியும் மட்டுமல்ல சர்வதேச சமூகமும் புரிந்துகொள்வது நல்லது.

## நாடும் நடப்பும்




# ராஜீவ் கொலையாளிகளுக்கு தூக்கு ஜனாதிபதி உறுதிப்படுத்தவேண்டும்!

### சுப்பிரமணியசுவாமி கோருகின்றார்

(கொழும்பு)

ராஜீவ் காந்தி கொலையாளிகளைத் தூக்கிலிடுவது குறித்து, ஜனாதிபதி விரைவில் முடிவெடுக்க வேண்டும் என்று, ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணியசுவாமி கோரிக்கை விடுத்துள்ளார்.

கொச்சியில் நேற்று முன்தினம் நிருபர்களைச் சந்தித்த சுப்பிரமணியசுவாமி - ஜனாதிபதி அப்துல்கலாமுக்கு கடந்த 12 ஆம் திகதி, தான் அனுப்பிய கடிதத்தின் பிரதியை வெளியிட்டார்.

அப்போது அவர் தெரிவித்ததாவது -

ராஜீவ் காந்தி கொலையாளிகளைத் தூக்கிலிடுவதைக் குறித்து, விரைவில் முடிவெடுக்க வேண்டுமென்று, ஜனாதிபதி அப்துல்கலாமுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளேன். இது குறித்து அவருக்குக் கடிதம் எழுதியுள்ளேன்.



ராஜீவ் காந்தி கொலையாளிகள் நான்கு பேருக்குத் தூக்குத் தண்டனை விதித்து, மேல் நீதி மன்றம் தீர்ப்பளித்து, 5 ஆண்டுகளுக்கு மேலாகிறது. இது குறித்து, ஜனாதிபதிக்கு கருணை மனு போடப்பட்டுள்ளது. ஆனால், இந்தக் கருணை மனுக்களை ஏற்பது குறித்தோ, நிராகரிப்பது குறித்தோ இதுவரை முடிவு ஏதும் எடுக்கப்படவில்லை.

எனவே, இந்த விடயத்தில், ஜனாதிபதி தலையிட்டு, விரைவில் ஒரு முடிவு எடுக்கவேண்டும் என, அவர் ஜனாதிபதியிடம் கோரியுள்ளார்.

# புலிகளின் கோரிக்கைகள் அனைத்தையும் அரசாங்கத்தால் நிறைவேற்ற முடியாது!

### மங்கள சமரவீர தெரிவிப்பு



தமிழீழ விடுதலைப் புலிகளால் திருகோணமலை கோமரங் கடவெலப் பகுதியில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட ஊர்காவல் படையினர் இருவரையும் விடுவிப்பதற்காகப் புலிகளின் கோரிக்கைகள் அனைத்தையும் நிறைவேற்ற முடியாதென அமைச்சரவைப் பேச்சாளர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

சந்தேகத்தின்பேரில் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு, தடுத்துவைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலி உறுப்பினர்கள் பத்துப்பேர் நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டனர்.

இதற்கு மேலும் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களை விடுதலை செய்வதற்கு அரசாங்கத்தால் முடியாது.

நேற்றுமுன்தினம் நாஹேன் பிட்டியவிலுள்ள தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களைத் தெரிவிக்கும் ஊடகவியலாளர்கள் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் - ஊர்காவல் படையினர் இருவரையும் விடுவிப்பதற்கு அரசாங்கம் உச்சக் கட்டமாகச் செயற்பட்டது. இதற்கென சர்வதேச மட்டத்திலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது.

இதற்காக விடுதலைப் புலிகளால் கேட்டுக் கொள்ளப்படும் அனைத்துக் கோரிக்கைகளையும் நிறைவேற்றினால், எதிர் வரும் காலங்களிலும் இதுபோன்ற நடவடிக்கைகளைச் செயற்படுத்தவேண்டி நேரிடும். எனவே, பொறுப்புள்ள அரசு என்றவகையில் ஆட்சியிலுள்ள அரசாங்கத்தால், அதனை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (தே)

## பயங்கரவாத நடவடிக்கைகள் குறித்து பாதுகாப்பு அதிகாரிகள் ஆராய்வு

இலங்கையில் எதிர்கொள்ளப்படும் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எவ்வாறு முகங்கொடுப்பது என்பது தொடர்பாக உலக நாடுகளின் பாதுகாப்பு தலைமை அதிகாரிகள் ஆராய்ந்துள்ளனர்.

அண்மையில் ஜப்பானில் நடைபெற்ற உலகப் பாதுகாப்பு தலைமையாளர்களின் மாநாட்டில் - இலங்கையின் சார்பில் பாதுகாப்பு அமைச்சின் தலைமை அதிகாரியும், கடற்படைத் தளபதியுமான தயா சந்தகிரி பங்கேற்றார்.

குறிப்பிட்ட மாநாட்டில் இலங்கையின் கடல் வலய பாதுகாப்புத் தொடர்பாகவும் கருத்துக்கள் பரிமாறப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இதேவேளை - அண்மையில் அமெரிக்காவின் குவாங்கில் நகரில் நடைபெற்ற விமானப் படைத் தளபதிகளுக்கான மாநாட்டில் பங்கேற்ற விமானப் படைத் தளபதி - எயார் மார்ஷல் டொனால்ட் பெரேராவும் நாடு திரும்பியுள்ளார்.

## வட இலங்கை சங்கீத சபையின் பரீட்சைக்கு விண்ணப்பித்தோருக்கு

வடஇலங்கை சங்கீத சபையின் பரீட்சைகளுக்கு விண்ணப்பித்திருப்போர், குறிப்பிட்ட இடங்களில் பரீட்சைக்கு தொற்ற முடியாத பட்சத்திலும், அவர்களுக்கருகில் உள்ள பரீட்சை நிலையங்களில் சென்று பரீட்சைகளுக்கு தோற்றலாம் என, வடஇலங்கை சங்கீத சபையினர் தெரிவித்துள்ளனர்.

அதன் படி யாழ்.மாவட்டத்தில் பரீட்சைகளுக்கு விண்ணப்பிக்கும் வன்னிப்பகுதி பரீட்சார்த்திகள் - பரீட்சைக் காலங்களில் இங்கு வந்து, பரீட்சை எடுக்க முடியாத நிலை ஏற்பட்டால், அவர்களது பிரதேசங்களுக்கருகில் அமைக்கப்படும் பரீட்சை நிலையங்களில் சென்று, பரீட்சை அனுமதி அட்டை காட்டிப் பரீட்சையில் தோற்றமுடியும்.

இவ்வாறான ஒரு நடைமுறை ஏற்கன்வே திட்டமிட்டிருந்தாலும், பல பிள்ளைகளுக்குத் தெரியாததால் பாரீட்சைக் காலங்களில் அவர்கள் பல சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகவும், இனிவரும்காலங்களில் இந்த நடைமுறையைப் பின்பற்றுமாறு அவர் மேலும் தெரிவித்தார்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் இடம்பெறவுள்ள வட இலங்கை சங்கீதசபைப் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்களை மார்கழி மாதம் முதலாம் திகதிவரை அனுப்பலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விதை உருளைக்கிழங்கு தேவையானோர் பொருண்மியத்துடன் தொடர்பு கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விவசாயிகளின் நன்மை கருதி, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் அனுசரணையுடன் விவசாயிகளுக்குத் தேவையான தரமான விதை உருளைக் கிழங்கினை கொலன்ட் மற்றும் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்து விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த விநியோகம் தொடர்பாக உருளைக்கிழங்கு உற்பத்திப் [illegible] உடுவில், கீரிமலை, கமநல சேவை நிலையங்களில் விவசாய சம்மேளனங்களுடன் கலந்துரையாடி இனம்காணப்பட்டு வருகிறது.

விதை உருளைக்கிழங்கு தேவைப்படுவோர், அந்தந்தப் பிரதேச தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பிரதேச இணைப்பாளருடனோ அல்லது கமநலசேவை நிலையங்களுடனோ தொடர்பு கொண்டு, தமது தேவைகளை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கமநல சேவை நிலையங்கள் ஊடாகவும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ஊடாகவும் தரமான விதை உருளைக்கிழங்கினை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

 சந்துரு

# தென்னை பரம்பலை மேலும் விருத்தி செய்யப்பட வேண்டும்

**வடமாகாணத்தில் மட்டும் பயன்தரு தென்னைகளின் இழப்பு ஏழு இலட்சத்துக்கும் அதிகம். வருடாந்த வருமான இழப்பு இருநூற்றி அறுபத்தி நான்கு மில்லியனிலும் அதிகம். போரின் பாதிப்புக்களில் இது ஒருபக்கம் என்கிறார் தென்னை அபிவிருத்திச் சபையின் வட பிராந்திய முகாமையாளர்.**

வடமாநிலம் எனப்படும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய ஐந்து மாவட்டங்களினதும் தேங்காய் உற்பத்திகளில் வருடாந்தம் 65 மில்லியன் வரையிலான தேங்காய்களை பெற்று 54 வீதத் தன்னிறைவில் இருந்த நாம்,



சி.சிவச்சந்திரன்

கடநத இருபது வருடப் போரின் விளைவாக, 700,000 இக்கும் மேற்பட்ட பயன்தரு தென் னைகளை இழந்து, அதனூடாக வருடா வருடம் 264 மில்லியன் ரூபா வருமானத்தையும் இழந்து நிற்கின றோம்.

கிளிநொச்சி மாவட்டத்தில் தனியார் வாடகை வீட்டில் இயங்கி வந்த எமது பிராந்திய காரியாலயம், போரினால் பாதிக்கப்பட்டு 1996 ஆம் ஆண்டுகளின் இறுதிப் பகுதிகளில் இருந்து ஒரு நிலையான இடமின்றிச் சிரமப்பட்டிருந்தது. 2002 ஆம் ஆண்டின் இறுதியில் புரிந்துணர்வு ஒப்பநததின் பின்னர், யாழ்.மாவட்டத்தில் தனியார் வீடு ஒன்றை வாடகைக்குப் பெற்று இயங்கி வருகின்றது. இது சமாதான உடன்படிக்கையின் பின்னர் ஏற்பட்ட ஒரு மாற்றம் என்றே கூற வேண்டும்.

2002 ஆம் ஆண்டு முதல் வேலைத திட்டமாக யாழ்ப்பாணம் அச்சுவேலியிலும், கிளிநொச்சி பன்னங்கண்டிப் பகுதியிலும் நாற்று மேடைகளை மீளச் செயற்படுத்த ஆரம்பித்தோம். இந்த இரு நாற்று மேடைகளும் 10 வருடங்களுக்கும் மேலாகப் போர்ப்பாதிப்பினால் சிதைந்து, பராமரிப்பின்றி அழிவடைந்திருந்தன. அவற்றை மீளச் செயற்படுத்த நாம் முயற்சித்த போதிலும், எமக்கு எது விதமான வசதிகளோ, உதவிகளோ இல்லாதிருந்தன. நாம் மிகுந்த சிரமத்தின் மத்தியில் நாற்று மேடைகளை அமைத்தோம். இருந்தும் இன்றுவரைகூட எந்தவிதமான அடிப்படைக கட்டமைப்பு வசதிகளும் இந்த நாற்று மேடைப் பகுதிகளில் ஏற்படுத்தப்படவில்லை. அதற்கேற்ப உரிய நிதி வசதிகள் எமக்குத் தரப்படுவதில்லை.

2002 ஆம் ஆண்டில் கிளிநொச்சி நாற்று மேடையில் 25000 நாற்றுக்களும், அச்சுவேலியில் 25000 நாற்றுக்களுமாக மொத்தம் 50000 நாற்றுக்களை மேடையிட்டோம். இந்த இரு நாற்று மேடைகளில் இருந்தும் ஏறக்குறைய 35000 நல்லின தென்னம் பிள்ளைகளை வீட்டுத் தோட்ட மேம்பாட்டுக்காக வழங்கியிருந்தோம். இதில் 70 வீதமான தென்னம்பிள்ளைகளை இலவசமாக வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதனடிப்படையில் ஏறக்குறைய 800 ஏக்கர் பரப்பளவில் 2002 ஆம் ஆண்டில் தென்னை நடுகை செய்யப்பட்டிருக்கும் என மதிப்பிட்டிருக்கின்றோம்.

2003 ஆம் ஆண்டில் அச்சுவேலியில் 51800 நாற்றுக்களையும், கிளிநொச்சியில் 50990 நாற்றுக்களையும் நாற்று மேடையில் பயிரிட்டோம்.

இந்த இரு நாற்று மேடைகளில இருந்தும் கடந்த வருடத்தில் 74000 தென்னம்பிள்ளைகளை விநியோகித்திருக்கின்றோம. இதன்படி பார்க்கையில், 2003 ஆம் ஆண்டில் 1050 ஏக்கர் பரப்பினில் தென்னை நடுகை செய்யப்பட்டிருக்கின்றது என்பது எமது கணிப்பீடு.

நாம் 2003 ஆம் ஆண்டில் தென்னை மீள் நடுகை, தென்னை புது நடுகை ஆகியவற்றுக்கு மானியத் திட்டங்களை அமுல்படுத்தியிருந்தோம். இதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்ட போது, யாழ், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலிருந்து 7799 விண்ணப்பங்கள் 15584 ஏக்கர் பரப்பளவில் நடுகை செய்வதற்காகக் கிடைத்திருந்தன. இந்த ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள ஒவ்வொரு தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்களது நிர்வாகப் பரப்புகளின் கீழ் 200 ஏக்கரும், பனை, தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தரது நிர்வாகப் பரப்பின்கீழ் 200 ஏக்கருமாக மொத்தம் 800 ஏக்கரில் புதுநடுகை, மீள்நடுகை செய்வதற்காக இலவசமாக நாற்றுக்களை வழங்க இலக்கு நிர்ணயித்திருந்தோம். எனினும் 759 ஏக்கரிலேயே மானியத்திட்டத்தின்கீழ் தென்னை நடுகை செய்வதற்கான இலக்கை அடைந்தோம். இவற்றுக்குரிய மானியக் கொடுப்பனவுகளில் முதலாம் கட்டக்கொடுப்பனவு இந்த வருடம் டிசம்பருக்குமுன் கொடுக்கப்படவுள்ளது.

இது மட்டுமன்றி, 2003 ஆம் ஆண்டில் புதுநடுகை, மீள் நடுகை என்பவற்றுககும் மேலாக, உரம் பாவிக்கவும், உரிமட்டைக் குழி அமைக்கவும், ஊக்குவிப்பதற்காக சிறுதொகை நன்கொடைகளும் வழங்கப்பட்டன.

2004 ஆம் ஆண்டில் அச்சுவேலியில் 31500 விதைத் தேங்காய்களையும், கிளிநொச்சியில் 53570 விதைத்தேங்காய்களையும் நாற்று மேடையிலிட்டுள்ளோம். இந்த நாற்று மேடைகளிலிருந்து, இந்த மாதம் முதல் வாரத்தில் இருந்து மூன்று மாவட்ட விவசாயிகளுக்கும் (முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம்) விநியோகிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். இதுவரை காலமும் எமது நாற்று மேடைகளிலிருந்து 40 ரூபாப்படியே தென்னை நாற்றுக்களை விற்பனை செய்து வந்தோம். ஆனால் இந்தவருடம், இந்த மாதம்முதல் தென்னம்பிள்ளைகளுக்கு மானியம் வழங்கப்பட்டு ஒரு பிள்ளை 25 ரூபாப்படி நடுகை செய்யும் ஆர்வமுள்ளவர்களுக்கு மட்டும் விற்பனை செய்யப்படவுள்ளது.

நாறறு மேடைகளிலிருந்து உற்பத்தி செய்யப்படுபவை யாவும் கலப்பினம் என்று கூறமுடியாது. அது மட்டுமன்றி எமது பிரதேசத்தில் நாம் கலப்பின நாற்றுக்களைப் பெருமளவில் ஊக்குவிக்கக் கூடாது. இநதமுறை அச்சுவேலியில் 5000 வரையிலான கலப்பின நாற்றுக்களையே உற்பத்தி செய்துள்ளோம். ஐந்து பிள்ளை கொள்வனவு செய்பவர்களுக்கு இரண்டு பிள்ளை கலப்பினப் பிள்ளை என்ற அடிப்படையிலேயே விநியோகிக்கப்படவுள்ளது. உதவி அரச அதிபர் பிரிவுகளூடாகத் தெரிந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே இந்த நாற்றுக்கள் இருபத்தைந்து ரூபாவீதம் வழங்கப்படும்.

எமது வடபுலப் பிரதேசமானது யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் 1982 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஏறக்குறைய 79200 ஏக்கரில், 19 இலட்சம் தென்னைகள் இருந்துள்ளன. இவற்றுள் 79 வீதமானவை காய்தந்த மரங்களே. அதாவது சுமார் 1454025 வரையான மரங்கள் காய்களைத் தந்துள்ளன. இந்த மரங்களிலிருந்து நாம் வருடம் ஒன்றுக்கு 65 மில்லியன் (65,000,000) தேங்காய்களை உற்பத்தி செய்து பெற்று வந்தோம். எமது நுகர்ச்சி ஒரு மனிதனுக்கு ஒரு வருடத்துக்கு 120 தேங்காய்கள் என்ற அடிப்படையிலும், வட மாகாணத்தில் அந்தக் காலப்பகுதியில் வசித்த மக்களுக்கு சுமார் ஒரு மில்லியன் என்ற அடிப்படையிலும் கணிப்பிடுகையில் 120 மில்லியன் தேங்காய்கள் வருடம் ஒன்றுக்கான எமது நுகர்ச்சித் தேவையாக இருந்துள்ளது. இந்த நிலையில் 65 மில்லியன் தேங்காய்கள் கிடைத்த அந்தக் காலப் பகுதியில் நாம் ஏறக்குறைய 54 வீதத் தன்னிறைவில் இருந்தோம் என்பதே உண்மையாகும்.

எமது பகுதியில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக வட பகுதியில் 700,000 தென்னை மரங்கள் - பயன்தரு தென்னை மரங்கள் அழிக்கப்பட்டு விட்டன. இதனால் வருடாந்தம் நாம் பெற்று வந்த தேங்காய் உற்பத்திகள் 32 மில்லியனாகக் குறைவடைந்துவிட்டன. இப்போது நாம் எமது பிரதேச தேங்காய் உற்பத்தியில் 25 வீதத்திலும் குறைவான தன்னிறைவிலேயே உள்ளோம். தற்போது யுத்த அழிப்பின் காரணமாக எமது பிரதேச மக்கள் தென்னைவள இழப்பினால் வருடாந்தம் 264 மில்லியன் ரூபாக்களை இழந்து வருகின்றனர்.

வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களது தென்னை அபிவிருத்திச் செயற்பாடுகள் வடபிராந்திய நிர்வாகத்தின்கீழ்தான் இருந்து வந்தன. நாட்டில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலை காரணமாகத் தென்னை அபிவிருத்திச் சபையின் தலைமை அலுவலகம், இந்த இரு மாவட்டங்களையும் பிரித்து அருகிலுள்ள மாவட்டங்களுடன் இணைத்து விட்டுள்ளது. அந்தவகையில் வவுனியா மாவட்டம் அனுராதபுர மாவட்டத்துடனும், மன்னார் மாவட்டம் புத்தளம் மாவட்டத்துடனும் இணைக்கப்பட்டு, அங்குள்ள பிராந்திய அலுவலகங்களுக் கூடாகத் தென்னை அபிவிருத்தி வேலைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

நர்வாக இலகுவாக்கலுக்காகவே இந்த ஒழுங்கமைப்புச் செயயப்பட்டுள்ளதாகக் கூறுகின்றனர்.

1993 ஆம் ஆண்டுக்குப் பின்னர்தான் இந்த ஒழுங்கமைப்புச் செய்யப்பட்டது.

தென்னை அபிவிருத்திச் சபையினால் தென்னைகளது பரம்பலைக்கொண்டே, தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நயமனம் செய்யப்படுகின்றனர். ஒவவொரு பிரதேச செயலர் பிரிவுக்குமென ஒவ்வொரு தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்களை நியமிப்பது சாத்தியமானதல்ல. எனினும் மீள்நடுகை எனக் கணிக்கப்படும்பொழுது, யாழ். மாவட்டததை இரண்டு பிரிவாகப் பிரிப்பது அவசியமாகின்றது. எனவே இது தொடர்பான வேலைத் திட்டங்களை நாம் அதிகரிக்கும்போது, யாழ்.மாவட்டத்தில் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்களது எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளவோம். தற்போது பத்தாயிரம் ஏக்கர் தென்னை விஸ்தீரணத்துக்கு (10,000) ஒரு தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் என்ற அடிப்படையிலேயே நியமனம் வழங்கப்பட்டு வருகின்றது. இந்த வகையில் யாழ் மாவட்டத்தில் 7094 ஏக்கருக்கு ஒருவரும், பளை உட்பட கிளிநொச்சி மாவட்டத்துக்கு 14731 ஏக்கருக்கு இருவரும் முல்லைத் தீவில் 6000 ஏக்கருக்கு ஒருவரும்என வடபிராந்திய நிர்வாகத்தின் கீழ் நான்கு தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தென்னை அதிகம் இருப்பதனால் பிரதேச செயலர் பிரிவுக்கு ஒரு தென்னை அபிவிருத்தி உத்தியோகததர் நியமிக்கப்பட்டனர் என்று கூறமுடியாது. எனினும் அங்கு ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுக்கும், ஒவ்வொரு தென்னை அபிவிருத்தி உத்தியோகததர்கள் நியமிக்கப்பட்டிருப்பது உண்மையே. 1978 ஆம் ஆணடில் அந்த மாவட்டத்தில் வீசிய சூறாவளி காரணமாக ஏற்பட்ட அவசர புனரமைப்பு வேலைத் திட்டம் காரணமாக ஐரோப்பிய நாடுகளது ஒன்றியம் வழங்கிய உதவித் திட்டத்தின் கீழ் அம்மா வட்டத்தில் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்களது எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது.

எமது பிரதேசத்தில் தென்னை மீள்நடுகை, புதிய நடுகை செய்யப்படவேண்டியது அவசியமே. அவ்வாறான ஒரு வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படும்போது தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரிவுகளும் அதிகரிக்கப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளமுடியும். தென்னை அபிவிருத்திச் சபையின் வடபிராந்தியக் காரியாலயத்தினால் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் தென்னை மீள்நடுகை, புது நடுகை செய்வதற்கென 1016 மில்லியன் ரூபர் செலவில் ஐந்தாண்டுத் திட்டம் ஒன்றினை வரைந்து எமது தலைமை அலுவலகத்திடம் 2003ஆம் ஆண்டில் கொடுத்து நிதியுதவி செய்யுமாறு கேட்டிருந் தோம். 1978ஆம் ஆண்டில் மட்டக்களப்பில் வீசிய சூறாவளிக்கு பிறகு புனர் நடுகைக்கு எடுத்த முயற்சிகள் போன்று, எமது மூன்று மாவட்டங்களிலும் மீள் நடுகை அவசியம் எனக் கேட்டிருந்தோம். நிதி வசதி இல்லை எனக்கூறி எமது தலைமை அலுவலகம் அதனைக் கிடப்பில் போட்டுவிட்டது.

இளம் தென்னைகளுக்கான பசளையை கமநல சேவை நிலையங்களில் தனித்தனியான உரங்களைப் பெற்று கலந்து பயன்படுத்தமுடியும். இதற்குரிய விகிதாசார அளவுகள் பற்றி அறிவுறுத்தியுள்ளோம். இவ்வாறு கலந்து பாவிப்பதற்கு அனுமதியும் வழங்கி இருந்தோம். தனியார் உர விற்பனை நிலையங்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டு, அவர்களும் 3Kg, 5Kg அளவுகளில் பொதி செய்யப்பட்ட இளம் தென்னைகளுக்கான உரத்தினை விற்பனை செய்கின்றனர். அவர்களிடம் C.I.C. நிறுவனப் பற்றுச் சீட்டுடன் கொள்வனவு செய்து உரமிடுபவர்களையும் நாம் ஏற்றுக் கொள்வதாகக் குறிப்பிட்டுள்ளோம்.

2002ஆம் ஆண்டில் இருந்து தென்னை அபிவிருத்திச் சபை உர விநியோகத்தை நிறுத்திக் கொண்டது. இருப்பினும் சென்ற வருடத்தில் மட்டும் விசேட திட்டத்தின் கீழ் வளர் மரங்களுக்கு, 3Kg பொதிகளில் அடைக்கப்பட்ட உரத்தைப் பெற்று வழங்கினோம். எனினும் இந்த வருடம் அவ்வாறு செய்ய முடியாது. அதற்கு சபை அனுமதிக்கமாட்டாது.

யாழ்.மாவட்டத்தில் பிராந்தியக் காரியாலயம் இருப்பது பிரச்சினையான ஒரு விடயமல்ல. தென்னைச் செய்கையாளருடன் நேரடித் தொடர்பு கொள்வது தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் மட்டுமே. மக்களுக் கும் பிராந்திய அலுவலகங்க ளுக்கும் நேரடித் தொடர்பு இல்லை. பிராந்திய நிர்வாக அலுவலகத்தில் நிர்வாகக் கடமைகள் மட்டுமே ஆற்றப்படுகின்றன. இது மக்களுக்கு ஆலோசனை வழங்கும் கட்டமைப்பு அல்ல. இதேபோன்றுதான் சிலாபப் பகுதியிலும் காணப்படுகிறது. சிலாபப் பிராந்தியக் காரியாலயம் நீர்கொழும்பு மாவட்டத்தின் மாரவிலவில் அமைக்கப்பட்டுள்ளது. இது புத்தளம் வண்ணாத்திவில் தொடக்கம் நிர்வாகப் பரப்பினைக் கொண்டுள்ளது. எனவே தான் கூறுகின்றேன் பிராந்தியக் காரியாலயம் எங்கு அமைந்தாலும் பரவாயில்லை. மக்கள் பிராந்தியக் காரியாலயத்துக்கு வர வேண்டிய தேவை இல்லை.

எமது தென்னை நாற்றுக்கள் அமைந்துள்ள இடங்களில் இருந்து மட்டுமே பெற்றுக் கொள்ள முடியும். இலங்கையின் எந்தப் பகுதியிலும் தென்னை அபிவிருத்திச் சபையால் விநியோக நடைமுறைகள் எவையும் செய்யப்படுவதில்லை. எனினும் எமக்கு ஏதாவது ஒரு வகையில் நிதி உதவிகள் அல்லது வாகன வசதிகள் கிடைக்குமாயின் விநியோகத்தை இலகுவாக்குவது பற்றி ஆராய முடியும்.

சிற்றுண்ணிகளது தாக்கத்தைக் கட்டுப்படுத்த நாம் 2002 ஆம் முதல் நடவடிக்கைகள் எடுத்து வருகின்றோம். தலைமை அலுவலகத்தினது சிபார்சின் பிரகாரம் எமக்கு அறிவிக்கப்படும் மருந்து வகைகளையே நாமும் பயன்படுத்தி வருகின்றோம். நாமாக எந்த ஒரு கிருமி நாசினியையும் பாவிக்கும்படி கூறுவதில்லை. அத்துடன் தென்னை உரிமையாளர் களையே மருந்துகளைத் தெளித்துக் கொள்ளுமாறு கூறுகின்றோம். தேவையான அறிவுறுத்தல்களை மட்டுமே நாம் தென்னை உரிமையாளர்களுக்கு வழங்குகின்றோம். மருந்து தெளிப்பதற்கென யாரையும் நாம் சிபார்சு செய்து அனுப்புவதில்லை.

ஆரம்பத்தில் சிற்றுண்ணியைக் கட்டுப்படுத்த கந்தகக்கரைசலும், பின்னர் உள்ளி, சவர்க்காரக் கரைசலும் பயன்படுத்து மாறு அறிவுறுத்தினோம். எனினும் இது நூற்றுக்கு நூறு வீதம் சிறந்த முறையல்ல. உண்மை யிலேயே உயிரியல் கட்டுப்பாடே இந்த ஒட்டுண்ணிகளைக் கட்டுப்படுத்த சிறந்த முறையாகும். எனவேதான் இந்த ஒட்டுண்ணியைக் கட்டுப்படுத்தக் கூடிய பூச்சி இனங்கள் தொடர்பாக தென்னை அபி விருத்திச் சபை ஆராய்நது வருகிறது. இந்தியாவில்கூட இந்த வகை ஒட்டுண்ணிகளைக் கட்டுப்படுத்த இரசாயன கிருமிநாசினிகளைப் பயன்படுத்தி இருந்தார்கள். அது பூரணமாக வெற்றியளிக்காத நிலையில் தற்போது உயிரியல் கட்டுப்பாட்டு முறைக்கு திரும்பியுள்ளனர்.


1971ஆம் ஆண்டில் காலப் பகுதியில் இலங்கையில் பொதுவாகக் காணப்பட்ட கியூமிங்கி எனப்படும் ஒருபீடையும் இரசாயனங்களால் கட்டுப்படுத்த முடியாத ஒரு நிலையில் உயிரியல் முறையில் கட்டுப்பாட்டுக்கு கொண்டு வரப்பட்ட ஒரு அனுபவம் எம்மிடம் உண்டு.

அணமைக் காலத்தில் தென்னை ஆராய்ச்சித் ஸ்தாபனம் கற்பிட்டிப் பகுதிகளில் இருந்து இந்தச் சிற்றுண்ணியை இல்லாமல் செய்யக் கூடிய வேறு ஒரு உயிரினம் பரவத் தொடங்கியுள்ளதாகக் கண்டறிந்துள்ளனர். இவ்வகையான உயிரினம் எமது பிரதேசத்திலும் உள்ளனவா? எனப் பார்ப்பதற்காக சென்ற வாரம் இவ்வகைச் சிற்றுண்ணிப் பாதிப்புக்கு உட்பட்ட சில குரும்பைகளை யாழ். நகரப் பகுதிகளில் இருந்து சேகரித்து ஆய்வுகளுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

பொதுவாக நோக்கும்போது 2002ஆம் ஆண்டைவிட 2004ஆம் இந்த சிற்றுண்ணியின் தாக்கம் எமது பகுதிகளில் ஓரளவு குறைவாகவே காணப்படுவது கண்டறியப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்று விண்வெளி வீரர்களுடன் சோயுஸ் ரொக்கெட் விண்ணுக்கு!



விண்வெளியில் உள்ள சர்வதேச விண்வெளி நிலையத்தில் தங்கி ஆராய்ச்சி செய்வதற்காக விண்வெளி வீரர்களை ஏற்றிக்கொண்டு சோயுஸ் டி.எம்.ஏ 5 ரொக்கெட் நேற்றுமுன்தினம் விண்வெளியில் பறந்தது.

ரஷ்ய வீரர்கள் ஷலிஸ்ஷான் ஷரிபோவ் யூரி ஷார்ஜின் அமெரிக்க வீரர் லொராய் சியாவோ ஆகியோர் இந்த ரொக்கெட்டில் பறந்தனர். ஷார்ஜின் தவிர மற்ற 2 பேரும் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் வரை அங்கு தங்கி ஆராய்ச்சி செய்வார்கள்.

ஷார்ஜின் மட்டும் விண்வெளியில் 10 நாட்கள் சுற்றி வருவார்.

கஜகஸ்தானில் உள்ள பைகானூர் விண்வெனி நிலையத்தில் இருந்து சோயுஸ் ரொக்கெட் நேற்றுமுன்தினம் காலை 9.06 மணிக்கு நெருப்பைப் கக்கிக் கொண்டு விண்ணில் சீறிப்பாய்ந்தது. அது 10 நிமிடத்தில் பூமியின் சுற்றுப் பாதையில் நுழைந்தது.

இன்று இந்த ரொக்கெட் சர்வதேச விண்வெளி நிலையத்துடன் இணைய இருக்கிறது. சர்வதேச விண்வெளி நிலையத்தில் கடந்த ஏப்ரல் மாதம் முதல் ஆராய்ச்சி செய்து வந்த ரஷ்யாவின் கென்னடி படால்கா அமெரிக்கர் மைக்கேல் பிங்கே ஆகியோர் சோயுஸ் ரொக்கெட்டில் சார்ஜின் உடன் பூமிக்குத் திரும்புகிறார்கள்.

# கொங்கோவின் கிழக்குப் பகுதி நகரை கிளர்ச்சிவாதிகள் கைப்பற்றியுள்ளனர்



கொங்கோவிலுள்ள தென் கிழக்கு பகுதி நகரொன்றை ஆயுதக்குழுவொன்று தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கத்தன்கா மாகாணத்திலுள்ள கனிமப் பொருட்கள் நிறைந்த கில்வா என்ற நகரத்தையே கத்கான் விடுதலை முன்னணி என்ற அமைப்பு தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளது.

இந்த நகரத்தை கைப்பற்றுவதற்கு இந்த அமைப்பின் உறுப்பினர்கள் அயல்நாடான சாம்பியாவிலிருந்து வந்திருக்கவேண்டுமெனவும், இவர்கள் போர்த்துக்கல் மொழியைப் பேசுகிறார்கள் எனவும் அனேகமாக இவர்கள் அங்கோலா இனத்தவர்களாக இருக்கவேண்டுமெனவும் கொங்கோ அரச தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

இதுதொடர்பாகக் கலந்துரையாடுவதற்கு கொங்கோ தூதுவர் ஒருவர் சாம்பியாவிற்கு அனுப்பப்பட்டுள்ளதாக கொங்கோ தகவல்துறை அமைச்சர் மோவா சகானி தெரிவித்தார்.

இந்த நகரத்தை மீளக் கைப்பற்றுவதற்கான நடவடிக்கையில் கொங்கோ படையினர் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


இதேவேளை கொங்கோ ஜனாதிபதி ஜோசப் கபிலா 2001 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த பின்னர் முதன்முதலாக கிஷான்கானி என்ற பிரதேசத்துக்கு செல்லவுள்ளார்.

கடந்த ஐந்து வருடமாக கொங்கோவில் இடம்பெற்று வந்த உள்நாட்டு யுத்தம் கடந்த வருடம் முடிவுக்கு வந்த நிலையில் கொங்கோவின் கிழக்குப் பகுதி நகரங்கள் கிஷான்கானி உட்பட கிளர்ச்சிவாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ளன.

கபிலாவின் இந்த விஜயத்தின் நோக்கம் இந்த கிளர்ச்சிவாதிகளை ஒன்றிணைத்து செயற்படுவதாக இருக்கலாமென அவதானிகள் தெரிவித்தனர்.

இவரை வரவேற்பதற்காக பல்லாயிரக்கணக்கான மக்கள் வீதியின் இருமருங்கிலும் காத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ஈராக்கில் தற்கொலை தாக்குதல்; 3 அமெரிக்கர் உட்பட 7 பேர் பலி!



(பாக்தாத்)

ஈராக் தலைநகர் பாக்தாத் நகருக்கு அருகேயுள்ள டூறா என்ற நகர்ப்பகுதியில் - மிகவும் உச்சப் பாதுகாப்புப் பகுதியாக உள்ள அமெரிக்க இராணுவமுகாம்கள் அமைந்த பகுதியில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் 3 அமெரிக்கப்படையினர் உட்பட 7 பேர் கொல்லப்பட்டதுடன் 15 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

ஆனாலும் இந்தத் தாக்குதல் தற்கொலைத்தாக்குதலா என்பதை உடனடியாக உறுதிப்படுத்த முடியவில்லையென செய்திகள் தெரிவித்தன.

இந்தத் தாக்குதலுக்குப் பின்னர் அமெரிக்க விமானங்கள் பலூஜா நகர்ப்பகுதியில் பாரிய விமானத் தாக்குதலை நடத்தியுள்ளன.

அமெரிக்கப் படையினரின் இந்தத் தாக்குதலில் எட்டுப் பொது மக்கள் கொல்லப்பட்டும் பலர் படுகாயமடைந்துமுள்ளதாக பலூஜா நகர வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

நேற்றுமுன்தினமும் பலூஜா நகர்மீது அமெரிக்க விமானங்கள் மற்றும் ஹெலிகொப்டர்கள் நடத்திய தாக்குதலில் ஐவர் கொல்லப்பட்டனர்.

அத்துடன் அப்பகுதியில் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளும் பொருட்டு அமெரிக்க, மற்றும் ஈராக் படைகளில் சுமார் 1000 பேர் முன்னேறிச் செல்வதாக ஏ.எப்.பி. செய்தி நிறுவனம் தெரிவித்தது.

அமெரிக்க விமானப்படையினர் கிளர்ச்சிவாதிகளின் சட்டவிரோத காவலரண்கள், ஆயுதங்கள் மறைத்துவைத்த கட்டடங்கள் மீதே தாக்குதலை நடத்தியதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்தது.

அடுத்த வருடம் ஜனவரி மாதம் ஈராக்கில் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் பலூஜா நகரிலுள்ள கிளர்ச்சிவாதிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளை தமது வசம் கொண்டுவர அமெரிக்க மற்றும் ஈராக்கிய படைகள் கடும் முயற்சி செய்து வருகின்றன.

பலூஜா நகரில் மறைத்து வைக்கப்பட்டுள்ள சர்காவி மற்றும் வெளிநாட்டுத் தீவிரவாதிகளை அப்பகுதி மக்கள் விடுவிக்காவிட்டால் அந்த நகர் மக்கள் இராணுவ நடவடிக்கைக்கு முகம் கொடுக்க வேண்டிவருமென ஈராக் பிரதமர் இயட் அலாவி எச்சரித்துள்ளார்.

இதேவேளை ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் நான்கு அமெரிக்க ஒப்பந்தகாரர், இரண்டு ஈராக்கியரென மொத்தம் ஆறுபேர் கொல்லப்பட்டதாகவும் ஒரு அமெரிக்க ஒப்பந்தகாரர் காணாமற் போயுள்ளதாகவும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தெரிவித்தது.




## இஸ்ரேல் படையினர் தாக்குதல்; காஸாவில் ஒரு பலஸ்தீனர் பலி!

காஸாவின் ஜபாலியா அகதி முகாம் பகுதியில் இஸ்ரேல் படையினர் நடத்திய விமானத்தாக்குதலில் பலஸ்தீனர் ஒருவர் கொல்லப்பட்டார்.

கொல்லப்பட்டவர் இஸ்லாமியக் குழுவொன்றின் உறுப்பினரெனவும், இவர், படையினரின் நிலைகளை அணுக முற்பட்ட வேளையிலேயே கொல்லப்பட்டதாகவும் இஸ்ரேல் இராணுவம் அறிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் நடைபெற்று ஒரு மணிநேரத்துக்குப் பின்னர் கருத்துத் தெரிவித்த இஸ்ரேல் பாதுகாப்பு அதிகாரிகள், தமது நீடித்த படை நடவடிக்கையை கைவிடவுள்ளதாகவும், இந்த நடவடிக்கை இஸ்லாமிய ஆயுதக் குழுக்கள் இஸ்ரேல் நகரங்கள் மீது நடத்தும் றொக்கட் தாக்குதலை தடுப்பதற்காகவே மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவித்தனர்.

இதேவேளை - இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோன், மேற்குக்கரை, காஸாப் பகுதிகளிலிருந்து 8000 இஸ்ரேலியக் குடியிருப்புக்களை அகற்றவுள்ளதை எதிர்த்து இப்பகுதியிலுள்ள சுமார் 3000 குடியிருப்பாளர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியுள்ளனர்.

# பாதுகாப்பமைச்சர் பிரணாப் முகர்ஜிக்கு துணைப்பிரதமர் பதவி வழங்க முடிவு

(புதுடெல்கி)

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசில் பாதுகாப்பு அமைச்சராக இருப்பவரான பிரணாப் முகர்ஜிக்கு மத்திய அமைச்சரவையில் பிரதமருக்கு அடுத்த இடம் வழங்கப்பட்டிருக்கிறது.

பிரதமர் வெளிநாட்டுச் சுற்றுப் பயணம் செய்யும்போது அமைச்சரவைக் கூட்டத்திற்கு பிரணாப் முகர்ஜிதான் தலைமை தாங்குவார்.

தற்போது முகர்ஜிக்கு துணைப் பிரதமர் பதவி வழங்க சோனியா காந்தி முடிவு செய்திருக்கிறார். மத்திய அரசில் நிர்வாக ரீதியான பிரச்சினைகளை மன்மோகன்சிங் திறம்பட சமாளித்து வருகிறார்.

ஆனால் அரசியல் ரீதியாக எழும்பிரச்சினைகள் அவருக்கு சிக்கலை ஏற்படுத்தி வருகிறது. இதை தீர்க்க பிரணாப் முகர்ஜிக்கு துணைப் பிரதமர் பதவியை வழங்குவதுதான் சரியானதென சோனியா காந்தி தீர்மானித்திருக்கிறார்.

ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு மத்தியில் பதவி ஏற்றபோதே பிரணாப் முகர்ஜிக்கு துணைப் பிரதமர் பதவி வழங்குவது என்று சோனியா முடிவுசெய்திருந்தார். ஆனால் காங்கிரஸ் கட்சியிலும் கூட்டணி கட்சியிலும் சிலர் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.



இதையடுத்து - சோனியா துணைப்பிரதமர் பதவி திட்டத்தை நிறுத்திவைத்தார். தற்போது பாரதீய ஜனதா மற்றும் இடதுசாரி கட்சிகள் அரசியல்ரீதியாக பல்வேறு பிரச்சினைகளை எழுப்பி வருகின்றன.

இதைத் தீர்க்க பிராணப் முகர்ஜிக்கு கூடுதல் அதிகாரத்தைக் கொடுத்து துணைப்பிரதமர் பதவியையும் வழங்க சோனியா திட்டமிட்டிருக்கிறார். இதனால் மன்மோகன் சிங்கிற்கு சுமைகுறையும்.

இதற்கிடையே துணைப்பிரதமர் பதவியை குறிவைத்து மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் அர்ஜுன் சிங்கும் [illegible] பிரணாப் முகர்ஜிக்கு துணைப் பிரதமர் பதவி கொடுப்பதற்கு அவர் எதிர்ப்புத் தெரிவித்து வருகிறார்.

# 19 சிறுவர்களை கொன்ற இருவருக்கு ஈரான் நீதிமன்றம் மரணதண்டனை!

ஈரானில் செங்கல் சூளையில் வேலைசெய்துவந்த 30 வயதான முகமது பிஜே என்பவருக்கு 19 சிறுவர்களை கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் நீதிமன்றம் மரணதண்டனை விதித்தது.

பக்தாஷ்ட் நகரில் வசித்த முகமது பிஜே - தன் நண்பர் அலி பாகியுடன் சேர்ந்து அகதிகளாக குடியேறிய ஆப்கான் சிறுவர்களை முறைகேடான உறவுக்குப் பயன்படுத்திவிட்டு பின்னர் கொலை செய்து புதைத்துள்ளார்.

அகதிகளின் பிள்ளைகள் என்பதால் அவர்கள் பொலிஸிசில் புகார் செய்யத் தயங்கினர். இதனால் கொலை பற்றி பொலிசுக்கு தெரியாமல் இருந்தது.

இறுதியில் இது வெளியே தெரிந்ததும் பொலிஸார் அவர்கள் இருவரையும் கைதுசெய்து நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தனர். வழக்கு விசாரணையின்போது பிஜே குற்றம் எப்படி நடந்தது என்பதை விபரித்தபோது பலியானவர்களின் உறவினர்கள் பிஜேயை அடித்து உதைத்தனர். இதனால் விசாரணை [illegible] பட்டது. விசாரணை முடிந்ததும் இருவருக்கும் நீதிபதி மரண தண்டனை விதித்தார்.

# முஷாரப் இராணுவத் தளபதியாக நீடிக்க பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது!

பாகிஸ்தான் ஜனாதிபதி பொறுப்பை வகித்துக்கொண்டே அந்நாட்டின் ராணுவத் தலைமைப் பதவியையும் வகிக்க பர்வேஸ் முஷாரப்புக்கு அதிகாரம் வழங்குவதற்கான சட்டம் அந்நாட்டு நாடாளுமன்றத்தில் ஒருமனதாக நிறைவேறியது.

கடந்த 1999 ஆம் ஆண்டு பாகிஸ்தானில் இரத்தமில்லாத ராணுவப் புரட்சி மூலம் ஆட்சியைப் பிடித்தவர் பர்வேஸ் முஷாரப்.

முப்படைகளின் தளபதி என்ற வகையில் ஆட்சியைப் பிடித்த இவர், கடந்த 2001 ஆம் ஆண்டு அப்போது இருந்த ஜனாதிபதியை ராஜினாமா செய்யவைத்து தன்னைத்தானே ஜனாதிபதியாக பிரகடனம் செய்தவர்.

முஷாரப்புக்கு ஒருபுறம் எதிர்ப்பு இருந்த நிலையில் கடந்த 2002 ஆம் ஆண்டு பாகிஸ்தானில் பொதுத்தேர்தலை நடத்தி அந்த எதிர்ப்பை சமாளித்தார்.

ஜனாதிபதி, இராணுவத் தளபதி பதவியை அவர் ராஜினாமா செய்ய வேண்டும் என்று சில அரசியல் கட்சிகள் போர்க்கொடி உயர்த்தின.

இந்த நிலையில் இந்த இரு பதவிகளையும் முஷாரப்பே வைத்துக்கொள்ள ஏதுவாக பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் சட்டம் ஒன்று கொண்டுவரப்பட்டது.

அந்தச் சட்டம் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஜனாதிபதி மற்றும் ராணுவத் தளபதி பதவி ஆகிய இரண்டு பதவிகளையும் முஷாரப்பே வைத்துக்கொள்வார்.

# அவுஸ்ரேலிய மிருகக்காட்சி சாலையில் மிகச் சிறியளவான கோலா கரடிக்குட்டி!



அவுஸ்ரேலியாவில் ஒரு மிருகக்காட்சி சாலையில் மனிதர்கள் தங்கள் உள்ளங்கையில் வைக்கும் அளவுக்கு கோலா கரடி ஒன்று உள்ளது.

இது மிகமிக சிறிய உடல் அளவு கொண்டது. இதன் பெயர் கூரி. குறை மாதத்தில் பிறந்தது. பிறந்த 7 மாதமான இந்த குட்டியின் எடை இப்போது வெறும் 11 அவுன்ஸ்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

வாகனக் கடத்தல்களுடன் தொடர்புடைய

# மன்னார் இராணுவ அதிகாரி பொலிஸாரிடம் அகப்பட்டார்!

(மன்னார்)

மன்னார் இராணுவ முகாமில் பணியாற்றும் இராணுவ உயர் அதிகாரியொருவரும் சிப்பாயொருவரும் பல்வேறு வாகனக் கடத்தல் சம்பவங்களுடன் தொடர்புடையதாக, கண்டி வத்தேகம பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இராணுவ மேஜர் டபிள்யூ.எம்.ஜி. அனுருத்த சம்பிக்க மற்றும் கோப்ரல் எம்.ஜி.குமாரதிலக ஆகியோரே கடந்த புதனன்று கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது 15 இற்கும் மேற்பட்ட வாகனக் கடத்தல் சம்பவங்களிலும், அனுராதபுரத்தில் வாகனச் சாரதியொருவர் படுகொலை செய்யப்பட்டு வாகனம் கடத்தப்பட்ட சம்பவத்தோடும் தொடர்புடையவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

இவரது வத்தேகம இல்லம் பொலிஸாரால் சோதனையிடப்பட்ட போது இரண்டரை அடி நீளமான கத்திகள் 2, கைக்குண்டுகள் - 28, வாகன இலக்கத்தகடு - 1 ஆகியன கைப்பற்றப்பட்டன.

குறிப்பிட்ட இருவரும் தெல்தெனிய நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இதேவேளை, இராணுவ மேஜருடன் மேலும் பல இராணுவச் சிப்பாய்கள் ஈடுபட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுவதால், பொலிஸார் தீவிர விசாரணையில் ஈடுபட்டு வருவதாகத் தெரியவருகின்றது.


# மருந்தாளர் போராட்டத்தால் நோயாளர்கள் பெரும் சிரமம்!

மருந்தாளர்கள் நேற்றுநடத்திய சுகவீனலீவுப் போராட்டம் காரணமாக யாழ்போதனாவைத்திய சாலை உள்ளிட்ட யாழ்.குடாநாட்டி லுள்ள பல்வேறு வைத்தியசாலைகளின் பணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டன.

அரச வைத்தியசாலைகளின் பணியாற்றும் மருந்தாளர்கள் நேற்றையதினம் சுகயீன லீவு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன் காரணமாக வைத்தியசாலைகளுக்கு சென்ற நோயாளர்கள் தமது நோய்க்கான மருந்தினைப் பெற்றுக்கொள்ள முடியாமல் திண்டாடினர்.

சில நோயாளர்கள் அவசர சிகிச்சைப்பிரிவில் தங்கியே சிகிச்சை பெற்றனர். இதைவிட பெருமளவான நோயாளர்கள் தனியார் மருந்தகங்களில் பணம் கொடுத்து மருந்துகளை பெற்றுச் சென்றதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

மருந்தாளர்களின் இந்தப் போராட்டத்தால் நோயாளர்கள் பெரும் இடர்பாடுகளை எதிர்நோக்கினர். எனினும இன்று வைத்தியசாலைகளில் பணிகள் வழமைக்குத் திரும்புமென தெரிவிக்கப்படுகின்றது. (12,17,தீ)



வெறிச்சோடிப்போயிருக்கும் வெளிநோயாளர் பிரிவு

## யுத் பவுண்டேசன் குழுவினர் யாழ். செயலகத்துக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

மலையகம் எட்டியான் தோட்டப் பகுதியில் இயங்கும் சௌமியா யுத் பவுண்டேசன் நிறுவனத்தின் குழுவொன்று நேற்று யாழ்.செயலகத்துக்கு விஜயம் செய்து,

யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி, உதவித் திட்டமிடல் முகாமையாளர் சிவபாதசுந்தரம், திட்டப் பணிப்பாளர் பி.சுந்தரம்பிள்ளை ஆகியோரைச் சந்தித்து உரையாடினர்.

சமாதானத்தை வலியுறுத்திய தமது சுற்றுப்பயணத்தின் ஒரு கட்டமாகவே அவர்கள் நேற்று யாழ் செயலகத்துக்கு விஜயம் செய்துள்ளனர்.

இங்கு மூன்று தினங்களாகத் தங்கியிருந்த அவர்கள் - நயினாதீவு, வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் உள்ளிட்ட பல பகுதிகளுககு விஜயம் செய்திருந்தனர்.

ஹலோ ட்ரஸ்ட் ஊழியர்

# மிதிவெடி வெடித்ததில் கைவிரலை இழந்தார்


உரும்பிராய் பகுதியில் மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிந்த ஹலோ ட்ரஸ்ட் பணியாளர் ஒருவர் மிதிவெடி வெடித்ததில் தனது வலதுகையில் காயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 11 மணியளவில் உரும்பிராய் மேற்கு மூன்று கோவிலடிப் பகுதியில் இடம்பெற்றது. யாழ். வண்ணார் பண்ணைச் சிவன் கோயிலடியைச் சேர்ந்த 29 வயதான வல்லிபுரம் சிவகுமார் என்பவரே காயமடைந்தவர் ஆவார்.

இந்தச் சம்பவத்தில் காயமுற்ற இளைஞர் வலது கையில் [illegible] விரலை இழந்த நிலையில் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகிறார்.

இதேவேளை, இந்தப் பகுதியில் சில வாரங்களுக்கு முன்னரும் ஹலோட்ரஸ்ட் ஊழியர் ஒருவர் மிதிவெடி வெடித்து இடது காலில் காயமடைந்தமையும் குறிப்பிடத்தக்கது. (82)

# 'அலைபாயும் பரணி' ஒலிநாடா அறிமுகவிழா!





(வடமராட்சி)

'அலைபாயும் பரணி' ஒலிநாடாவின் அறிமுகவிழா நாளை வடமராட்சி- நெல்லியடியில் நடைபெறவுள்ளது.

எம்.ரி.சொய்சின், எம்.ரி.சொய் ஆகிய கப்பல்களுடன் வீரச்சாவெய்திய 24 கடலோட்டிகள் நினைவாக, இசைப்பிரியனின் இசையில் நிதர்சனம் தர்மேந்திரா கலையகத் தினால் இந்த ஒலிநாடா உருவாக்கப்பட்டது.

நாளை பிற்பகல் 3 மணிக்கு நெல்லியடி நெல்லை முருகன் கல்யாண மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கான ஏற்பாடுகளை கடற்புலிகள் செய்துள்ளனர்.

### வீட்டிலிருந்த..

டன் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள செல்லத்துரை ஆனந்தன் (வயது 32) என்ற இந்த நபர், தனியார் மதுபான உற்பத்தி நிறுவனமொன்றில் பணியாற்றுபவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் இரவு 8.15 மணியளவில் இவரது வீட்டிற்குச் சென்ற இனம்தெரியாத நபர்கள் இருவர், கடிதமொன்று தர இருப்பதாகக்கூறி வெளியே வருமாறு இவரை அழைத்து, துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றதாகத் தெரியவருகிறது.

### அப்துல்...

பெரும்பாலான பௌத்தர்கள் சமாதானமாக வாழ்கின்றனர். அத்துடன் ஒருவர் வார்த்தையால் வெல்வதென்பது அது ஆயிரம் போர்களில் வெல்வதைவிட மேலானது எனவும் அவர் தெரிவித்தார்.

### வந்தாறு மூலை..

யொன்றே இந்த விபத்துக்குள்ளானது.

வேகமாகச் சென்ற பஸ், பாதையை விட்டு விலகி, கிழக்கு பல்கலைக்கழகத்துக்கு அருகிலுள்ள காணியொன்றுக்குள் குடைசாய்ந்தது. பலியானவர் வாழைச்சேனையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை லக்சுமி என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

### சமாதானப்...

இந்திய அரசியல் தலைவர்கள் அனைவரும் இலங்கையில் சமாதானப்பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என விருப்பம் கொண்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளை அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தை மேடைக்குக் கொண்டு வந்து அவர்களை அதில் தொடர்ந்திருக்கச் செய்வதிலேயே அரசாங்கத்தின் வெற்றி தங்கியுள்ளது.

சமாதானமுயற்சிகளுக்கு ஆதரவை வழங்குவதற்கு முன்வந்ததை இந்திய அரசியல் தலைவர்கள் வரவேற்றுள்ளனர்.

ஒஸ்லோ பிரகடனத்தின் அடிப்படையில் பேச்சுக்கள் ஆரம்பிக்க வேண்டும் என்பதை தமது கட்சி வலியுறுத்தி வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## காலத்தை வென்றவன்...

ஞாயிற்றுக்கிழமை 6 மணிக்கு நோர்வே - றொம்மன் வளாகத்தில் அமைந்துள்ள அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த விழாவில் தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், தமிழீழ நீதி - நிர்வாகப் பொறுப்பாளர் பரா, மட்டு - அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், மகளிர் அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் கீதா ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரையாற்றவுள்ளனர்.

போர்க்காலத்தையும் சமாதான காலத்தையும் தமிழீழ விடுதலைக்காக தமிழீழத் தேசியத் தலைவர் எவ்வாறு நுண்திறனோடு கையாள்கிறார் என்பதை விபரிக்கும் ஒரு பதிவாக இந்த வரலாற்று நூல் அமைந்துள்ளது.

### சைக்கிளில்..

தேவநாயகம் சுதர்சன் (வயது 20) என்ற இளைஞரே காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வீதியில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த சமயம் எதிர்கொண்ட நபரொருவர், இவர்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டுத் தப்பிச் சென்றதாகத் தெரியவருகிறது.

வாழைச்சேனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கண்காணிப்புக் குழுவின்...

இந்தச் சந்திப்பில் - இனப்பிரச்சினை பற்றிய ஓர் அடிப்படை விளக்கம் உட்பட தற்போதைய சமாதானப் பேச்சுக்களின் நிலைப்பாடு மற்றும் யுத்த நிறுத்த ஒப்பந்தம் போன்றவை குறித்து தமிழ்ச்செல்வன் விபரமாக கருத்துரை வழங்கினார்.

தற்போதைய இலங்கையின் சமாதான நிலைப்பாடுகளை விரிவாகக் கேட்டறிந்த பின்லாந்து இராஜாங்க செயலாளர், போரினால் பாதிப்படைந்த மக்களுக்கான மனிதாபிமான உதவிகளை வழங்குவதில் பின்லாந்து அரசு தனது முழுமையான ஒத்துழைப்பையும், உதவியையும் வழங்கும் என்று நம்பிக்கை வெளியிட்டதுடன், சமாதானப் பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிக்கும்படி இரு தரப்பினருக்கும் அவசர வேண்டுகோளையும் விடுத்தார்.

இராஜாங்க செயலாளரைச் சந்திக்கும் முன்னர், வெளிநாட்டு அலுவல்களுக்குப் பொறுப்பான இராஜாங்கச் செயலாளர் போலா மொய்சன்டரை சந்தித்த சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர், போரினால் பாதிப்படைந்த பகுதிகளுக்கான மனிதாபிமான நிவாரண உதவிகள் குறித்து விரிவாக ஆராய்ந்தனர்.

இந்தச் சந்திப்பை ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான க.ஜயர் ஆல்போர்ட்ஸ் ஒழுங்கு செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## யாழ். வந்த...

சாலையில் அனுமதிக்கப்பட்டு சிசிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த சம்பவத்தின்போது செல்லத்துரை திருநாவுக்கரசு என்பவர் சிறுகாயமடைந்து கிளிநொச்சி வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைபெற்று வருகிறார்.

கொழும்பிலிருந்து பயணிகளை ஏற்றிவந்த ஹயேஸ் வான், யாழ்ப்பாணத்திலிருந்து பொருட்களை ஏற்றி வந்த லொறியுடன் கொக்காவில் புத்துவெட்டுவான் சந்தியில் எதிரெதிரே மோதி விபத்துக்குள்ளாகியதாகத் தெரியவருகிறது. இதில் ஹையேஸ் வான் பலத்தசேதமடைந்தது.

சம்பவ இடத்துக்கு சென்றிருந்த காவல் துறையினர் விசாரணைகளை மேற்கொண்டனர்.

யாழ்ப்பாணம் அத்தியடி புதுவீதியைச் சேர்ந்த லொறிச்சாரதி பிலிப்பையா அன்ரனி மரியதாஸ் (வயது 49) என்பவரை கைதுசெய்து விசாரணைக்குட்படுத்தியுள்ளனர்.

இதேவேளை, பூநகரி பரந்தன் வீதியில் ஓவசியர் கடைச்சந்திப் பகுதியில், நேற்றுக் காலை 8.30 மணியளவில் லொறி மோதியதால் வீதியால் சென்றுகொண்டிருந்த 55 வயதான முதியவர் ஒருவர் மரணமானார் என்பது குறிப்பிடத்தக்கது.


# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



25 01 1936 — 09 10 2002

திருமதி த. குமாரசாமி சிவபாக்கியம்

அன்போடு பேசி, பண்போடு அரவணைத்து
எம்மை ஆதரவாய் வழி நடத்திய அன்னையே!
நீங்கள் மறைந்து இரண்டு ஆண்டுகள்
கடந்தாலும், உங்கள் நினைவு
உள்ளத்தில் என்றும் நிலைத்திடும்.

என்றும் உங்கள் நினைவில் வாடும்

கணவன் - த.குமாரசாமி
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

த.குமாரசாமி அன் சன்ஸ்
248/1 K.K.S. வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 16.10.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.